## Basic Tamil Notes Part 6

1. **பொருள் எழுதுக.**

சுடர் - ஒளி

ஆனந்தம் - மகிழ்ச்சி

பராபரம் - மேலான பொருள்

2. **பிரித்து எழுதுக.**

பசும்பொற்சுடர் - பசுமை + பொன் + சுடர்

கண்ணிறைந்த - கண் + நிறைந்த

3. **சேர்த்து எழுதுக.**

என் + உள்ளம் - என்னுள்ளம்

பெருமை + அறிவு - பேரறிவு

4. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. வாழ்த்துப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் தாயுமானவ சுவாமி திருப்பாடல் திரட்டு
2. தாயுமானவர் பிறந்த ஊர் திருமறைக்காடு
3. தாயுமானவர் மனைவியின் பெயர் மட்டுவார்குழலி

1. **பிரித்து எழுதுக.**

செயற்கரிய - செயற்கு + அரிய

நட்பன்று - நட்பு + அன்று

பொருட்டன்று - பொருட்டு + அன்று

ஆறுய்த்து - ஆறு + உய்த்து

கொட்பின்றி - கொட்பு + இன்றி

யாவுள - யா + உள

2. **பொருள் எழுதுக**

கேண்மை - நட்பு

உடுக்கை - ஆடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அல்லல் | - | துன்பம் | கிழமை | - | உரிமை |
| நகுதல் | - | சிரித்தல் | இடுக்கண் | - | துன்பம் |
| கொட்பு | - | மாறுதல் | வினை | - | செயல் |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
2. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப்
3. திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் திருவள்ளுவமாலை
4. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பதே நட்பு
5. நிறைநீர நீரவர் கேண்மை - இத்தொடரில் நட்பு எனும் பொருள் தரும் சொல் கேண்மை
6. உருசிய நாட்டில் அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் உள்ள சுரங்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் திருக்குறளும் இடம் பெற்றுள்ளது.
7. இங்கிலாந்து நாட்டுக் காட்சிச்சாலையில் திருக்குறள் விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது.
8. திருக்குறளை வீரமாமுனிவர் இலத்தீனில் மொழிபெயர்த்தார்

**4. பொருளுணர்ந்து பொருத்துக.**

1. பேதையார் நட்பு - உடுக்கை இழந்தவர் கை போன்றது
2. பண்புடையாளர் தொடர்பு - வளர்பிளை போன்றது
3. அறிவுடையார் நட்பு - நவில்தொறும் நூல்நயம் போன்றது
4. இடுக்கண் களையும் நட்பு - தேய்பிறை போன்றது

**விடை:**

1. பேதையார் நட்பு - தேய்பிறை போன்றது
2. பண்புடையாளர் தொடர்பு - நவில்தொறும் நூல்நயம் போன்றது
3. அறிவுடையார் நட்பு - வளர்பிளை போன்றது
4. இடுக்கண் களையும் நட்பு - உடுக்கை இழந்தவர் கை போன்றது

**1. பிரித்தெழுதுக.**

1. செந்தமிழ் - செம்மை + தமிழ்
2. புத்துயிரூட்டி - புத்துயிர் + ஊட்டி
3. சதுரகராதி - சதுர் + அகராதி
4. அன்றலர்ந்த - அன்று + அலர்ந்த
5. பேச்சுக்கலை - பேச்சு + கலை
6. தொன்னூல் - தொன்மை + நூல்

**2. சேர்த்தெழுதுக.**

1. புகழ் + ஆரம் - புகழாரம்
2. நம் + தமிழ் - நந்தமிழ்
3. பெருமை + இன்பம் - பேரின்பம்
4. நன்மை + நூல் - நன்னூல்
5. தமிழ் + அறிஞர் - தமிழறிஞர்

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. புதுக்கவிதைக்கு வித்திட்டவர் பாரதியார்
2. வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி
3. ஆறுக நாவலரை 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் பாரட்டியவர் பரிதிமாற்கலைஞர்
4. வீரமாமுனிவருக்குப் புகழாரம் சூட்டியவர் ரா.பி.சேதுப்பிள்ளை
5. குணங்குடி மஸ்தான் சாகிபின் இயற்பெயர் சுல்தான் அப்து காதிறு

4. பொருத்துக.

1. சமுதாயப் புரட்சிக்கு - திரு.வி.கலியாணசுந்தரனார்
2. பொது உடைமை - மறைமலையடிகள்
3. தனித்தமிழுக்கு - பாரதிதாசன்
4. பேச்சுக்கலைக்கு - புதுமைப்பித்தன்
5. சிறுகதைக்கு - அறிஞர் அண்ணாதுரை

1. சமுதாயப் புரட்சிக்கு - பாரதிதாசன்
2. பொது உடைமை - திரு.வி.கலியாணசுந்தரனார்
3. தனித்தமிழுக்கு - மறைமலையடிகள்
4. பேச்சுக்கலைக்கு - அறிஞர் அண்ணாதுரை
5. சிறுகதைக்கு - புதுமைப்பித்தன்

**1. கீழ்க்காணும் தொடரில் உள்ள குற்றியலுகரச் சொற்களை வகைப்படுத்துக.**

தம்பி சுக்கு, மிளகு வாங்கவதற்கு நட்டுமருந்துக் கடைக்குச் சென்றான். கடைக்காரர் இரண்டனையும் எடைபோட்டு ஐந்து உரூபா என்றார்.

சுக்கு - வன்றொடர்க் குற்றியலுகரம்.

மிளகு - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

மருந்து - மென்றொடர்க் குற்றியலுகரம்

ஐந்து - மென்றொடர்க் குற்றியலுகரம்

வாங்குவதற்கு - வன்றொடர்க் குற்றியலுகரம்.

**2. கீழ்க்காணும் குற்றியலுகரச்சொற்களை வகைப்படுத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. கோங்கு | 4. பந்து | 7. குத்து | 10. இஃது |
| 2. நண்டு | 5. நாடு | 8. பாலாறு | 11. கஃசு |
| 3. கொய்பு | 6. மார்பு | 9. கொக்கு | 12. மஞ்சு |

நெடில்தொடர்க் குற்றியலுகரம் - நாடு

ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் - இஃது, கஃசு

உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - பாலாறு

வன்றொடர்க் குற்றியலுகரம் - குத்து, கொக்கு

மென்றொடர்க் குற்றியலுகரம் - கோங்கு, நண்டு, பந்து, மஞ்சு

இடைத்தொடர்க் குற்றியலுகரம் - கொய்பு, மார்பு

3. **கோடிட்ட இடங்களில் உரிய குற்றியலுகரச்சொற்களை எழுதி நிரப்புக.**

1. கிளைக்குக் கிளை குரங்கு தாவியது.
2. சிறுவன் பந்து வைத்துக்கொண்டு விளையாடுகிறான்.
3. பொற்கொடி பூக்களை கொய்து வந்தான்.
4. குயவர் பானையை வனைந்து கொண்டிருந்தார்.
5. பாலின் நிலம் கொண்ட பறவை கொக்கு

1. **கீழ்க்காணும் சொற்களுள் உள்ள முற்றியலுகரச்சொற்களை எடுத்து எழுதுக.**

மாடு, பசு, கடுகு, கதவு, வீடு, அன்பு, மடு, மார்பு, விடு, மூக்கு

விடை: பசு. கதவு, மடு, வீடு

5. **நிரப்புக.**

1. குற்றியலுகரத்துக்கு அரை மாத்திரை.
2. குற்றியலிகரத்துக்கு அரை மாத்திரை.
3. முற்றியலுகரத்துக்கு ஒரு மாத்திரை.

1. **கீழ்க்காணும் சொற்களுள் பொருந்தாதவற்றை எடுத்து எழுதுக.**

1. சுக்கு, மருந்து, சார்பு, மது, கஃசு

**விடை:** மது

2. அஃது, நன்று, சீட்டு, கொசு, உயர்வு

**விடை:** உயர்வு

3. 1,2,3,4,5,6,8 ஆகிய எண்களை எழுத்தால் எழுதி, இவற்றுள் நெடில்தொடர்க் குற்றியலுகர எண்ணைத் வட்டமிடுக.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, **ஆறு**, எட்டு.

4. நான்கு, ஆறு, எட்டு - இவற்றின் அயலெழுத்தை நோக்க, எவ்வகைக் குற்றியலுகரக்சொற்கள் என எழுதுக.

நான்கு - மென்றொடர்க் குற்றியலுகரம்.

ஆறு - நெடில் தொடர்க்குற்றியலுகரம்

எட்டு - வன்றொடர்க் குற்றியலுகரம்.

4. 'குற்றியலுகரம்' - இத்தொடை எவ்வாறு பிரிப்பது சரி?

அ. குற்றியல் + உகரம்

ஆ. குறுமை + இயலுகரம்

**இ. குறுமை + இயல் + உகரம்**

5. பாராட்டு என்பது .................................. குற்றியலுகரம்.

அ. நெடில்தொடர் **ஆ. வன்தொடர்** இ. உயிர்த்தொடர்

6. ஒரேயொரு குற்றெழுத்தைத் தனக்கு முன் பெற்று வரும் வல்லின உகரங்கள் ..............................

அ. நெடில்தொடர்க் குற்றியலுகரம்

**ஆ. முற்றியலுகரம்**

இ. உயிர்தொடர்க் குற்றியலுகரம்

7. 'கணவு' - இச்சொல்லின் ஈற்றில் உள்ள உகரம் ............................

அ. வல்லின மெய்யை ஊர்ந்து வந்தது ஆ. மெல்லின மெய்யை ஊர்ந்து வந்தது

**இ. இடையின மெய்யை ஊர்ந்து வந்தது**

**8. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக.**

1. தனிக்குறிலைச் சாராது சொல்லின் இறுதியில் வல்லினம் ஊர்ந்து வரும் உகரங்களே குற்றியலுகரம் ஆகும்.

2. 'சுக்கு' என்பது வன் தொடர்க் குற்றியலுகரம்

3. ஈற்று அயலெழுத்தை நோக்கக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்

**ஆ. குற்றியலுகர வகையையும் குற்றியலுகரச் சொல்லையும் பொருத்துக.**

| குற்றியலுகர வகை | | குற்றியலுகரச்சொல் |
|---|---|---|
| 1. வன்தொடர் | - | பண்பாடு |
| 2. மென்தொடர் | - | இஃது |
| 3. இடைத்தொடர் | - | காடு |
| 4. உயிர்த்தொடர் | - | சொல்லு |

5. ஆய்தத்தொடர் - சார்பு
6. நெடில்தொடர் - பட்டு
 - தொங்கு

விடை

1. வன்தொடர் - பட்டு
2. மென்தொடர் - தொங்கு
3. இடைத்தொடர் - சார்பு
4. உயிர்த்தொடர் - பண்பாடு
5. ஆய்தத்தொடர் - இஃது
6. நெடில்தொடர் - காடு

**இ. கீழுள்ள குற்றிலுகரச்சொற்களை வகைப்படுத்திப் பிரித்தெழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| வண்டு | கொக்கு | முரசு | எஃகு |
| கயிறு | வரகு | ஒன்று | ஆறு |
| ஒன்பது | எழுது | நூறு | அழகு |
| எட்டு | மாசு | மாண்பு | வேறு |
| மிளகு | நாடு | இஃது | கிணறு |

விடை

நெடில்தொடர் : மாசு, நாடு, நூறு, ஆறு, வேறு

ஆய்தத்தொடர் : இஃது, எஃகு

உயிர்த்தொடர் : கயிறு, ஒன்பது, மிளகு, வரகு, எழுது, முரசு, அழகு, கிணறு

வன்தொடர் : எட்டு, கொக்கு

மென்தொடர் : வண்டு, ஒன்று, மாண்பு

**ஈ. கீழ் உள்ளனவற்றில் உள்ள குற்றியலுகரத்தையும் குற்றியலிகரத்தையும் வகைப்படுத்தி எழுதுக.**

பாகு சுக்கியாது வயிறு கேண்மியா

| | | | |
|---|---|---|---|
| அங்கு | பந்தியாது | தப்பு | கூறு |
| சென்மியா | முருகு | தூம்பு | மார்பியாது |
| சால்பியாது | பஞ்சு | நாடியாது | பாடியான் |

விடை

குற்றியலுகரம் : பாகு, அங்கு, முருகு, பஞ்சு, வயிறு, தப்பு, தூம்பு, கூறு

குற்றியலிகரம் : சென்மியா, சால்பியாது, சுக்கியாது, பந்தியாது, நாடியாது, கேண்மியா, மார்பியாது, பாடியான்

1. **வினவியவாறு சொற்றொடர்களை மாற்றுக.**

1. பூம்புகார்ச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளன. - இந்தச் செய்திச் சொற்றொடரை வினாச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: பூம்புகார்ச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளனவா?

2. 'அறம் செய்' - இக்கட்டளைச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: அறம் செய்ய வேண்டும்.

3. முயன்றால் முடியாததும் உண்டோ? - இவ்வினாச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: முயன்றால் முடியாதது இல்லை.

4. முயற்சி செய்ய வேண்டும் - கட்டளைச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: முயற்சி செய்

5. வள்ளுவரை அனைவரும் அறிவர் - வினாச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: வள்ளுவரை அனைவரும் அறிவரோ?

6. இசையின் இனிமையை அறியாதார் யார்? - செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: இசையின் இனிமையை அனைவரும் அறிவர்.

7. மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வு எழுதினர் - வினாச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வு எழுதினரா?

8. குடியரசுத்தலைவர் சென்னைக்கு வருகை தந்தார் - இந்தச் செய்திச் சொற்றொடரை வினாச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: குடியரசுத் தலைவர் சென்னைக்கு வருகை தந்தாரா?

9. ஆ! வானத்து விண்மீன்கள் என்னே அழகு! - இந்த உணர்ச்சிச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராயும் வினாச் சொற்றொடராயும் மாற்றுக.

**விடை**: வானத்து விண்மீன்கள் அழகாய் உள்ளன. (செய்திச் சொற்றொடர்)

வானத்து விண்மீன்கள் அழகாய் உள்ளன அன்றோ? (வினாச் சொற்றொடர்)

10. ஐயோ! பேரறிஞர் அண்ணா மறைந்தாரே! - இந்த உணர்ச்சிச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: பேரறிஞர் அண்ணா மறைந்தார்

11. மாணவர்கள் சீருடையில் பள்ளிக்கு வருக. - இக்கட்டளைச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக

**விடை**: மாணவர்கள் சீருடையில் பள்ளிக்கு வரவேண்டும்.

12. அனைவரும் தாய்மொழியைப் போற்றுக - இந்தக் கட்டளைச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: அனைவரும் தாய்மொழியைப் போற்ற வேண்டும்.

13. குழந்தைக்கு என்ன தெரியும்? - இவ்வினாச் சொற்றொடரைச் செய்திச் சொற்றோடராய் மாற்றுக.

**விடை**: குழந்தைக்கு ஒன்றும் தெரியாது

14. உண்மைக்கு அழிவில்லை அல்லவா? - இவ்வினாச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை**: உண்மைக்கு அழிவில்லை

15. செய்திச் சொற்றொடராய் மாற்றுக - நாள்தோறும் உடற்பயிற்சி செய்க.

**விடை**: நாள்தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

16. வினாச் சொற்றொடராய் மாற்றுக - திருவள்ளுவர் சிலை அழகாய் உள்ளது.

**விடை**: திருவள்ளுவர் சிலை அழகாய் உள்ளது அன்றோ?

17. கட்டளைச் சொற்றொடராய் மாற்றுக - ஒவ்வொரு நாளும் செய்தித்தாளைப் படிக்க வேண்டும்

**விடை**: ஒவ்வொரு நாளும் செய்தித்தாள் படி.

18. உணர்ச்சிக் சொற்றொடராய் மாற்றுக - ஓவியம் மிக அழகாய் உள்ளது.

**விடை**: ஆ! ஓவியம் எவ்வளவு அழகாய் உள்ளது!

1. **கீழ்க்காணும் தொடர்கள் எவ்வகையைச் சேர்ந்தவை?**

1. தென்னை மரத்திற்குக் கிளைகள் இல்லை. - **செய்தித்தொடர்**
2. இந்தச் செயலைச் செய்தவர் யார்? - **வினாத்தொடர்**
3. இளமையில் கல் - **கட்டளைத்தொடர்**
4. என்னே, தமிழின் இனிமை! - **உணர்ச்சித்தொடர்**
5. சிறந்த நூல்களை அரங்கேற்றுதல் பண்டைக்கால வழக்கம் - **செய்தித்தொடர்**

2. **கீழ்க்காணும் தொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

1. உழைத்துப்பிழை (செய்தித் தொடராக்குக)

**விடை** : உழைத்துப்பிழை (செய்தித் தொடராக்குக.)

2. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளன. (உணர்ச்சித் தொடராக்குக)

மாமல்லபுரத்துச் சிற்பங்கள் என்னே அழகு!

3. மணிமொழி நன்கு பாடினாள். (பெருமாள் மாறாமல் எதிர்மறையாக்குக.)

**விடை** : மணிமொழி நன்கு பாடாமல் இல்லை.

ஈ. கமலா பரிசு பெற்றாள். ( வினாத்தொடராக்குக.)

கமலா பரிசு பெற்றாளா?

உ. நினைவாற்றலை வளர்த்துக்கொள்க. ( கட்டளைத் தொடராக்குக.)

நினைவாற்றலை வளர்த்துக்கொள்.

3. **தமிழ் எண்களை அறிவோம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | 1 | சு | 6 | கக | 11 | கசு | 16 |
| உ | 2 | எ | 7 | கஉ | 12 | கஎ | 17 |
| ங | 3 | அ | 8 | கங | 13 | கஅ | 18 |
| ச | 4 | கூ | 9 | கச | 14 | ககூ | 19 |
| ரு | 5 | ய | 10 | கரு | 15 | உய | 20 |

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச்சொற்கள் |
|---|---|
| இண்டர்வியூ | நேர்காணல் |
| சரளமாக | தங்கு தடையின்றி |
| நிச்சயமாக | உறுதியாய் |
| ஜாப் | வேலை |
| மேனேஜர் | மேலாளர் |

**1. ஓரிரு சொற்களில் விடையளிக்க.**

1. 'முத்தே பவளமே ......................' அடுத்து வரும் சொற்றொடரைக் கூறுக.

விடை: மொய்த்த பசும் பொற்சுடரே.

2. கேட்டதனை வழங்கும் மரம் எது?

விடை: கற்பகத்தரு

3. பேச்சுக்கலையில் சிறந்து விளங்கிய தமிழறிஞர் யார்?

விடை: அறிஞர் அண்ணாதுரை

4. சிறுகதைக்கு உரமூட்டியவர் யார்?

விடை: புதுமைப்பித்தன்

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. வாழ்த்துச்செய்யுள் <u>தாயுமானவர் திருப்பாடல் திரட்டு</u> நூலில் இடம் பெற்றுள்ளது.
2. பராபரம் <u>இறைவன் என்னும்</u> பொருளை உணர்த்துகிறது.

**3. கீழ்க்காணும் கூற்றுச் சரியா தவறா எனக் கூறுக.**

1. குணங்குடி மஸ்தான் சாகிபைத் தைரியநாதன் என்றழைப்பர்

விடை : தவறு

2. யாதும் ஊரே யாவரும் கேளிர் எனப் பாடியவர் கணியன் பூங்குன்றனார்.

விடை : சரி

**3. தொடரில் அமைத்து எழுதுக.**

1. மணம் : மல்லிகையின் மணம் மனத்தை மயக்குகிறது.

2. மனம் : மனத்தை ஒருநிலைப்படுத்தினால் இறைவனை அடையலாம்.

**1. பிரித்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| செய்தித்தாள் | - | செய்தி | + | தாள் |
| ஓரிடம் | - | ஓர் | + | இடம் |
| அன்றலர்ந்த | - | அன்று | + | அலர்ந்த |
| நாளிதழ் | - | நாள் | + | இதழ் |
| முன்னுரிமை | - | முன் | + | உரிமை |
| செய்திக்களம் | - | செய்தி | + | களம் |

**2. சேர்த்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| வான் | + | ஒலி | - | வானொலி |
| சொல் | + | பிழை | - | சொற்பிழை |
| முத்து | + | எடுப்பது | - | முத்தெடுப்பது |
| தனி | + | திறன் | - | தனித்திறன் |
| நிதி | + | அமைச்சர் | - | நிதியமைச்சர் |
| வடிவு | + | அமைப்பு | - | வடிவமைப்பு |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. செய்தியைப் பெறுதல் என்பது துப்பறிதல் போன்றதாகும்.
2. பொதுமக்களின் கருத்துகளை கூறெடுப்பு ஆய்வு வாயிலாய் அறியலாம்.

**1. கீழ்காணும் சொற்களை வகைப்படுத்துக.**

அன்பரசி கேணியிலிருந்து தண்ணீர் கொணர்ந்தாள்; தோட்டத்தில் ரோஜாவைப் பறித்து மாலையாக்கினாள்; கோவிலுக்குச் சென்று இறைவனுக்குப் பூஜை செய்தாள். அந்தணர் மறைமொழி கேட்டு மெய்ம்மறந்து நின்றாள்.

| | | |
|---|---|---|
| இயற்சொல் | - | தண்ணீர், மாலை |
| திரிசொல் | - | கொணர்ந்தாள், மறைமொழி |
| திசைச்சொல் | - | கேணி, அந்தணர் |

winmeen.com

வடசொல் - ரோஜா, பூஜை

**2. கீழ்க்காணும் திசைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களைப் பொருத்துக.**

திசைச்சொல் தமிழ்ச்சொல்

1. பண்டிகை - மூலம்
2. வெள்ளம் - வணிகம்
3. வியாபாரம் - விரிப்பு
4. அசல் - திருவிழா
5. அச்சன் - காட்சி
6. ஜமக்காளம் - நீர்ப்பெருக்கு
7. வேடிக்கை - தந்தை

**விடை:**

1. பண்டிகை - திருவிழா
2. வெள்ளம் - நீர்ப்பெருக்கு
3. வியாபாரம் - வணிகம்
4. அசல் - மூலம்
5. அச்சன் - தந்தை
6. ஜமக்காளம் - விரிப்பு
7. வேடிக்கை - காட்சி

**2. பொருத்துக.**

1. நிலம், நாய் - வினைத்திரிசொல்
2. வந்தது, படித்தான் - பெயர் இயற்சொல்
3. களிறு, புரவி - வினை இயற்சொல்
4. வினவினான், நோக்கினான் - பெயர்த்திரிசொல்

**விடை:**

1. நிலம், நாய் - பெயர் இயற்சொல்

2. வந்தது, படித்தான் - வினை இயற்சொல்

3. களிறு, புரவி - பெயர்த்திரிசொல்

4. வினவினான், நோக்கினான் - வினைத்திரிசொல்

1. பேரிலக்கியங்கள் என்றால் என்ன?

அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் உறுதிப் பொருள்கள் நான்கனையும் உணர்த்தி, மக்களை நல்வழிப்படுத்தும் இலப்பியங்கள் பேரிலக்கியங்கள் எனப்படும்.

2. பிரபந்தம் என்பதன் பொருள் யாது?

பிரபந்தம் என்பதற்கு 'நன்கு கட்டப்பட்டது' என்பது பொருள்.

3. உரைநடைப்பகுதியில் இடம் பெற்றுள்ள எதிர்ச்சொற்களை எழுதுக.

பேரிலக்கியம் x சிற்றிலக்கியம்

4. இலக்கியம் - பிரிக்கும் முறை

அ) இல + கியம் ஆ) இலக்கிய + இம் **இ) இலக்கு + இயம்**

**1. கீழ்க்கண்ட கூற்றுகளை மாற்றுக.**

1. "நான் நாளை வருவேன்" என வளவன் கூறினான் - **நேர்க்கூற்று**.

தான் மறுநாள் வருவதாய் வளவன் கூறினான் - **அயற்கூற்று**.

2. "ஆசிரியர் இன்று வந்து காணுமாறு என்னை அழைத்தமையால் நான் செல்கிறேன்" என்று இளங்கோ கூறினான் - **நேர்க்கூற்று**.

ஆசிரியர் அன்று வந்து காணுமாறு தன்னை அழைத்தமையால் தான் செல்வதாய் இளங்கோ கூறினான் - **அயற்கூற்று**.

3. அவள் கொண்ட கவலையை விடுமாறு கமலம் தன் தோழியைத் தேற்றினாள் - **அயற்கூற்று**.

"நீ கொண்ட கவலையை விடு" என்று கமலம் தன் தோழியைத் தேற்றினாள் - **நேர்க்கூற்று**.

4. நான் மறுநாள் சென்றால் பணம் தருவதாய் நண்பன் கூறினான். - **அயற்கூற்று**.

"நீ நாளை வந்தால் பணம் தருவேன்" என்று நண்பன் கூறினான் - **நேர்க்கூற்று**.

**2. கீழ்க்காணும் நேர்க்கூற்றுத் தொடர்களை அயற்கூற்றுத் தொடர்களாய் மாற்றுக.**

1. "நாளை நான் மதுரை செல்வேன்" என்று நன்மாறன் கூறினான்.

**அயற்கூற்று** : தான் மறுநாள் மதுரை செல்வதாய் நன்மாறன் கூறினான்.

2. “நான் புத்தகம் கொண்டுவருகிறேன்” என்று செல்வி தோழியிடம் கூறினாள்.

**அயற்கூற்று** : தான் புத்தகம் கொண்டுவருவதாய்ச் செல்வி தோழியிடம் கூறினாள்.

3. “நான் நாளை வருவேன்” என்று அழகுச்சிலை கூறினாள்

**அயற்கூற்று** : நான் மறுநாள் வருவதாய் அழகுச்சிலை கூறினாள்.

4. “ஆசிரியர் இன்று வந்து காணுமாறு கூறியிருப்பதால் நான் செல்கிறேன்; நீயும் வா” என்று இளங்கோ கதிரவனிடம் கூறினான்.

**அயற்கூற்று** : ஆசிரியர் அன்று வந்து தம்மைக் காணுமாறு கூறியிருப்பதால் தான் செல்வதாகவும், அவனையும் வருமாறு இளங்கோ கதிரவனிடம் கூறினான்.

5. “நீ உன் மொழியை உயர்த்தினால்தான் உன் நாடு உயரும்; அறிவும் உயரும்” எனப் பாரதிதாசன் கூறியுள்ளார்.

**அயற்கூற்று** : அவன் அவன் மொழியை உயர்த்தினால்தான் அவன் நாடு உயரும்; அறிவும் உயருமென்று பாரதிதாசன் கூறியுள்ளார்.

6. “நாளைக் காலையில் வா. உனக்குச் சேர வேண்டிய தொகையைத் தருகிறேன்” என்று மேலாளர் கூறினார்.

**அயற்கூற்று** : மறுநாள் காலையில் வந்தால் அவனுக்குச் சேரவேண்டிய தொகையைத் தருவதாய் மேலாளர் கூறினார்.

7. “உன்னிடம் திறமையும் ஆற்றலும் இருக்கின்றன. உழைத்தால் முன்னேறுவாய்” என்று ஆசிரியர் மாணவனிடம் கூறினார்.

**அயற்கூற்று** : அவனிடம் திறமையும் ஆற்றலும் இருக்கின்றன வென்றும், உழைத்தால் முன்னேறுவான் என்றும் ஆசிரியர் மாணவனிடம் கூறினார்.

3. **கீழ்க்காணும் அயற்கூற்றுகளை நேர்க்கூற்றுத் தொடர்களாய் மாற்றுக.**

1. இசையாசியர் மாணவர்களிடம் நாள்தோறும் பாடிப் பழகும்படி கூறினார்.

**நேர்க்கூற்று** : இசையாசிரியர் மாணவர்களிடம், “நீங்கள் நாள்தோறும் பாடிப் பழகவேண்டும்” என்று கூறினார்.

2. அமைச்சன் அரசனிடம் செங்கோல் வழுவாது ஆட்சி செய்ய வேண்டும் என்றான்.

**நேர்க்கூற்று** : அமைச்சன், “அரசே! நீங்கள் செங்கோல் வழுவாது ஆட்சி செய்ய வேண்டும்” என்றான்.

3. போட்டியில் அவன் முதற்பரிசு பெற்றிருப்பதாய் ஆசிரியர் கூறினார்.

**நேர்க்கூற்று** : "போட்டியில் நீ முதற்பரிசு பெற்றிருக்கிறாய்" என்று ஆசியிர் கூறினார்.

4. தன்னைப் பள்ளிச் சுற்றுலாவில் கலந்துகொள்ள அனுமதிக்கு மாறு மலையரசி தன் தந்தையிடம் கேட்டாள்.

**நேர்க்கூற்று** : "தந்தையே! நான் பள்ளிச் சுற்றுலாவில் கலந்து கொள்ள அனுமதியுங்கள்" என்று மலையரசி கேட்டாள்.

5. மறுநாள் தன்னுடைய பிறந்தநாளென்றும், கட்டாயம் அவன் விருந்துக்கு வரவேண்மும் என்றும் மதிவாணன் தன் நண்பனை அழைத்தான்.

**நேர்க்கூற்று** : "நாளை என்னுடைய பிறந்தநாள். கட்டாயம் நீ விருந்துக்கு வரவேண்டும்" என்று மதுவாணன் தன் நண்பனை அழைத்தான்.

6. நாள்தோறும் காலையில் எழுந்து உடற்பயிற்சி செய்தால் உடம்பு வலுப்பெறும் என மருத்துவர் அதியனிடம் கூறினார்.

**நேர்க்கூற்று** : "நாள்தோறும் காலையில் எழுந்து உடற்பயிற்சி செய்; உடம்பு வலுப்பெறும்" என்று மருத்துவர் அதியனிடம் கூறினார்.

7. அன்பரசி, மல்லிகை மலர் வாங்கி வருமாறு தன் தாயாரிடம் கூறினாள்.

**நேர்க்கூற்று** : "அம்மா! மல்லிகை மலர் வாங்கி வாருங்கள்" என்று அன்பரசி தன் தாயாரிடம் கூறினாள்

8. நேர்ச்கூற்றாய் மாற்றுக : தந்தை மகனிடம் நன்கு படிக்கும்படி கூறினாள்.

தந்தை, "மகனே! நீ நன்கு படிக்க வேண்டும்" என்று கூறினார் - **நேர்க்கூற்று.**

9. அயற்கூற்றாய் மாற்றுக : முதலாளி, தொழிலாளியிடம் "நேர்மையாய் உழைக்க வேண்டும்' என்று கூறினார்.

நேர்மையாய் உழைக்குமாறு முதலாளி, தொழிலாளியிடம் கூறினார் - **அயற்கூற்று.**

1. **கீழ்க்காணும் சொற்றொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

1. பாரதிதாசன், "தமிழ் என் உயிர் என்பேன்" என்றார். (அயற்கூற்றாக்குக.)

**விடை:** பாரதிதாசன் தமிழைத் தம் உயிர் என்றார்.

2. தான் மறுநாள் வருவதாய்ப் பூவிழி கூறினாள் (நேர்க் கூற்றாக்குக)

**விடை:** "நான் நாளை வருவேன்" எனப் பூவிழி கூறினாள்.

3. "நீ வைகறையில் துயிலெழவேண்டும்" என்று ஆசிரியர் சிந்தனைச் செல்வனிடம் கூறினார். (அயற்கூற்றாக்குக.)

**விடை**: சிந்தனைச் செல்வனிடம் வைகறையில் துயிலெழு மாறு ஆசிரியர் கூறினார்.

4. தந்தை தம் மகனை நோக்கி, "நீ நாள்தோறும் ஒழுங்காய்ப் பாடத்தைப் படித்துக்கொண்டு வா" என்று கூறினார். (அயற்கூற்றாங்குக)

**விடை**: தந்தை தம் மகனிடம், நாள்தோறும் ஒழுங்காய்ப் பாடத்தைப் படித்துக்கொண்டு வருமாறு கூறினார்.

5. பழத்தைத் தனக்குக் கொடுக்குமாறு கபிலனை வேலன் கேட்டான். (நேர்க்கூற்றாக்குக)

**விடை**: வேலன் "பழந்தை எனக்குக் கொடு" என்று கபிலனிடம் கேட்டான்.

1. **கீழ்க்காணும் உரையாடலைச் செய்தியாக்குக.**

அமைச்சர் : முல்லைக்கொடியின் துயர் தீர்த்து வாழ்வனித்த பாரி வள்ளலே, இன்று உங்கள் முகம் வாட்டமுடன் இருக்கக் காரணம் என்ன?

அமைச்சர், முல்லைக்கொடியின் துயர்தீர்த்து வாழ்வளித்த பாரி வள்ளலிடம் அன்று முகம் வாட்டமுடன் இருப்பதற்குக் காரணம் என்ன என்று கேட்டார்.

ஆ. குழலி : "எழில், நாளை உன் வீட்டிற்கு வரலாம் என எண்ணுகிறேன். இருவரும் சேர்ந்து கணக்குப் போடலாமா?"

**விடை**: குழலி, எழிலிடம் மறுநாள் தான் அவள் வீட்டிற்கு வர எண்ணுவதாகவும், தாங்கள் இருவரும் சேர்ந்து கணக்குப் போடமுடியுமா என்றும் கேட்டாள்.

2. **கீழ்க்கண்ட தொடர்களுள் அடிக்கோடிட்ட சொற்களுடன் இல் அல்லது உள் என்னும் சொல்லை இணைத்து எழுதுக.**

1. சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியம் ஒன்று.

**விடை**: சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.

2. ஏறு தழுவுதல் வீரவிளையாட்டு ஒன்று.

**விடை**: ஏறு தழுவுதல் வீரவிளையாட்டுகளுள் ஒன்று.

3. பறவை மரம் கூடு கட்டியிருந்தது.

**விடை**: பறவை, மரத்தில் கூடு கட்டியிருந்தது.

4. பேரறிர் அண்ணா சிறந்த மேடைப்பேச்சாளர் ஒருவர்.

விடை: பேரறிஞர் அண்ணா சிறந்த மேடைப்பேச்சாளருள் ஒருவர்.

5. தமிழ் நூல்கள் எளிய நடை எழுதுதல் வேண்டும்.

தமிழ்நூல்கள் எளிய நடையில் எழுதுதல் வேண்டும்.

6. திருக்குறள் அறநூல்கள் ஒன்று

திருக்குறள் அறநூல்களுள் ஒன்று

7. பள்ளியில் நடைபெற்ற ஓவியப்போட்டி கலந்துகொண்டேன்.

பள்ளியில் நடைபெற்ற ஓவியப்போட்டியில் கலந்துகொண்டேன்.

1. **கோடிட்ட இடத்தில் உரிய பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. குழவி என்பதன் பொருள் ..............................

அ. ஒருவகைத் தேனீ ஆ. ஒருவகைக் குருவி **இ. குழந்தை**

2. பிணி என்பதன் பொருள் .........................

**அ. நோய்** ஆ. வறுமை இ. ஏழை

3. சலவர் - இச்சொல்லின் எதிர்ச்சொல் ............................

அ. நண்பர் **ஆ. நல்லவர்** இ. வஞ்சகர்

4. கழறும் என்பதன் பொருள் ......................

**அ. பேசும்** ஆ. குழறும் இ. எழுதும்

5. குவை என்பதன் பொருள் ............................

அ. குவளை **ஆ. குவியல்** இ. மலை

2. ஓரிரு சொற்களில் விடையளிக்கவும்.

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் பெயர்களுள் நான்கனை எழுதுக.

**விடை**: திருக்குறள், நாலடியார், இனியவை நாற்பது, கார்நாற்பது.

2. யாருடன் சேராமல் இருந்தால் இனிமை தரும் ?

**விடை**: வஞ்சகருடன் சேராமல் இருந்தால் இனிமை தரும்.

3. குழந்தை எப்படி வாழ்தல் வேண்டும்?

**விடை**: குழவி, நோயின்றி உடல் நலத்துடன் வாழ்தல் வேண்டும்.

4. யாருடைய அழகு வேண்டா எனக் கவிஞர் சச்சிதானந்தன் கூறுகிறார்?

**விடை**: மன்மதனின் அழகு வேண்டா எனச் சச்சிதானந்தன் கூறுகிறார்.

5. கவிஞர் சச்சிதானந்தன் பிறந்த நாடு எது?

**விடை**: கவிஞர் சச்சிதானந்தன் பிறந்த நாடு, இலங்கை

**1. பொருள் எழுதுக.**

வள்ளை - நெல் குற்றும்போது பெண்கள் பாடும் பாட்டு.

அளகு - கோழி

**2. பிரித்து எழுதுக.**

தினையளவு - தினை + அளவு

பனையளவு - பனை + அளவு

மனையளகு - மனை + அளகு

குறட்பா - குறள் + பா

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் திருவள்ளவமாலை
2. 'தினையளவு' என்னும் பாடலில் கலீலியோ கலிலியின் அணுகுமுறை அமைந்துள்ளது.

**1. பொருள் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆழி | - | கடல் | மேதி | - | எருமை |
| தார் | - | மாலை | ஞாலம் | - | உலகம் |
| விசும்பு | - | ஆகாயம் | களிகூர | - | மகிழ்ச்சி மிக |
| அரவு | - | பாம்பு | நாகு | - | பசு |
| புள் | - | பறவை | மல்லல் | - | வளம் |

**2. பிரித்து எழுதுக.**

பசுந்தலை - பசுமை + தலை

மாசிலா - மாசு + இலா

ஈரிருவர் - இரு + இருவர்

பைங்குவளை - பசுமை + குவளை

செந்தாமரை - செம்மை + தாமரை

3. **சேர்த்து எழுதுக**

சுயம் + வரம் - சுயவரம்

கோடு + இடறி - கோடிடறி

அருள் + என்றாள் - அருளென்றாள்

மாசு + இலா - மாசிலா

செம்மை + தாமரை - செந்தாமரை

நன்மை + நுதல் - நன்னுதல்

4. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நளவெண்பாவை இயற்றியவர் புகழேந்திப்புலவர்
2. புகழேந்திப்புலவர் வெண்பாவில் புகழேந்தி என்று போற்றப்படுகிறார்.
3. நளவெண்பாவில் அமைந்துள்ள வெண்பாக்களின் எண்ணிக்கை நானூற்று முப்பத்து ஒன்று
4. புகழேந்திப்புலவரை ஆதரித்த வள்ளல் சந்திரன் சுவர்க்கி

1. **பிரித்து எழுதுக.**

இருபதாண்டு - இருபது + ஆண்டு

மின்னணுவியல் - மின் + அணு + இயல்

உள்ளங்கை - உள் + அம் + கை

மேம்பாடடைய - மேம்பாடு + அடைய

மின்னஞ்சல் - மின் + ஆஞ்சல்

இணையற்ற - இணை + அற்ற

பேரூர் - பெருமை + ஊர்

ஈராயிரம் - இரண்டு + ஆயிரம்

2. **சேர்த்து எழுதுக.**

குறிப்பு + ஏடு - குறிப்பேடு

| | | | |
|---|---|---|---|
| நுண்மை | + அறிவு | - | நுண்ணறிவு |
| பதிவு | + இறக்கம் | - | பதிவிறக்கம் |
| இணையம் | + தளம் | - | இணையத்தளம் |
| தொலை | + தொடர்பு | - | தொலைத் தொடர்பு |
| கம்பி | + சுருள் | - | கம்பிச்சுருள் |
| குறுமை | + பரப்பு | - | குறும்பரப்பு |
| பல்கலை | + கழகம் | - | பல்கலைக்கழகம் |
| கை | + அடக்கம் | - | கையடக்கம் |
| சிறுமை | + ஊர் | - | சிற்றூர் |
| கணிதம் | + பேராசிரியர் | - | கணிதப்பேராசிரியர் |
| உலகு | + எங்கும் | - | உலகெங்கும் |

3. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு கணினி
2. 'கணினியின் தந்தை' என்றழைக்கப்படுபவர் சார்லஸ் பாப்பேஜ்
3. இணையம் என்ற வடிவத்திற்கு வித்திட்டவர் ஜான் பாஸ்டல்
4. தமிழ் எழுத்துகளை எழுதவும் ஒலிக்கவும் கற்றுத்தரும் இணையத்தளம் தமிழம்
5. கணினி வழியாய் மொழிக்கல்வியும் பெறவியலும்

1. **சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.**

1. 'இல்முன்' என்பதை 'முன்றில்' எனக் கூறுவது ..........................

அ) இலக்கணப்போலி ஆ) மரூஉ

இ) இடக்கரடக்கல் ஈ) குழூஉக்குறி

2. 'இறந்தவரைத் துஞ்சினார்' என்று கூறுவது ......................

அ) இடக்கரடக்கல் ஆ) மங்கல வழக்கு

இ) குழூஉக்குறி ஈ) மரூஉ

3. தஞ்சாவூரைத் 'தஞ்சை' என வழங்குவது .....................

அ) குழூஉக்குறி ஆ) இலக்கணப்போலி

இ) மரூஉ ஈ) இடக்கரடக்கல்

4. கள்ளைச் 'சொல் விளம்பி' என்று கூறுவது ..................................

அ) இலக்கணப்போலி ஆ) மங்கல வழக்கு

இ) குழூஉக்குறி ஈ) மரூஉ

5. 'விளக்கை அணைத்துவிடு' என்பதை 'விளக்கைக் குளிரவை' என்று கூறுவது.

அ) இலக்கணப் போலி ஆ) மங்கல வழக்கு

இ) மரூஉ ஈ) குழூஉக்குறி

**2. வழக்கு வகையையும் எடுத்துக்காட்டையும் பொருத்துக.**

| வழக்கு வகை | | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. இலக்கணப்போலி | - | இறைவனடி சேர்ந்தார் |
| 2. மரூஉ | - | பொன்னைப் பறி என்றல் |
| 3. இடக்கரடக்கல | - | கோவை |
| 4. மங்கல வழக்கு | - | புகழேந்தி நளவெண்பா இயற்றினார் |
| 5. குழூஉக்குறி | - | கால் கழுவி வந்தேன் |
| | - | கோயில் |

**விடை**

| வழக்கு வகை | | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. இலக்கணப்போலி | - | கோயில் |
| 2. மரூஉ | - | கோவை |
| 3, இடக்கரடக்கல் | - | கால் கழுவி வந்தேன் |
| 4. மங்கல வழக்கு | - | இறைவனடி சேர்ந்தார் |
| 5. குழூஉக்குறி | - | பொன்னைப் பறி என்றல். |

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. 'சிவிறி' என்பதை 'விசிறி' எனக் கூறுவது இலக்கணப்போலி வழக்கு.

2. இறந்தாரை 'இறைவனடி சேர்ந்தார்' என்பது <u>மங்கல</u> வழக்கு
3. 'விளக்கைக் குளிர வை' என்பது <u>மங்கல</u> வழக்கு

**2. பொருத்துக.**

1. இலக்கணமுடையது - கோவை
2. இலக்கணப்போலி - நிலம்
3. மரூஉ - புறநகர்

**விடை:**

1. இலக்கணமுடையது - நிலம்
2. இலக்கணப்போலி - புறநகர்
3. மரூஉ - கோவை

**பொருத்துக.**

1. இடக்கரடக்கல் - பறி
2. மங்கலம் - கால்கழுவி வந்தான்
3. குழூஉக்குறி - இறைவனடி சேர்ந்தார்

**விடை:**

1. இடக்கரடக்கல் - கால்கழுவி வந்தான்
2. மங்கலம் - இறைவனடி சேர்ந்தார்
3. குழூஉக்குறி - பறி

**விடை:**

விலங்கு இளமைப்பெயர்

1. பசு - கன்று
2. பன்றி - குட்டி
3. சிங்கம் - குருளை
4. கீரி - பிள்ளை

**3. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களுள் சரியான சொல்லைத் தெரிந்தெடுத்து, கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. யானை ........................ (**பிளிறுகிறது**/ கத்துகிறது)
2. ஓவியர் படம் ........................... (**வரைந்தார்**/போட்டார்)
3. குயவர் பானை ............................. (செய்தார்/**வனைந்தார்**)
4. நான் தேநீர் ........................ (**பருகினேன்**/தின்றேன்)
5. பசு, கன்றை ...................... (**ஈன்றது**/போட்டது)
6. ஆராவமுதன் பாட்டுப் ........................ (**பாடுகிறான்**/படிக்கிறான்)
7. அலை ..................... (**வீசுகிறது**/அடிக்கிறது)
8. முதியவர் கூடை ........................... (செய்கிறார்/**முடைகிறார்**)
9. இராமன் கூரை ......................... (செய்தான்/**வேய்ந்தான்**)
10. தாயார் சோறு ............................... (**சமைத்தார்**/ஆக்கினார்)

**1. பொருத்தமான மரபுச்சொல்லைத் தேர்ந்தெழுதுக.**

1. குமரன் பழம் ................................ (உண்டான்/**தின்றான்**)
2. காலையில் சேவல் ............................. (**கூவியது**, கத்தியது)
3. ஆட்டு ................................ (கூட்டம்/**மந்தை**) வருகிறது.
4. எங்கள் ஊரில் வாழைத் ...................... (**தோட்டம்**/தோப்பு) உள்ளது.
5. குயில் .............................. (**கூவியது**/அகவியது)

**2. கீழுள்ள பெயர்களுக்கு உரிய இளமைப்பெயர்களை எழுதுக.**

1. கீரிப் **பிள்ளை**
2. மான் **கன்று**
3. சிங்கக் **குருளை**
4. பூனைக் **குட்டி**
5. எருமைக் **கன்று**

**பொருத்துக.**

1. மக்கள் - போர்
2. வீரர் - கற்றை

3. விறகு - கூட்டம்
4. சுள்ளி - கட்டு
5. வைக்கோல் - படை

**விடை:**

1. மக்கள் - கூட்டம்
2. வீரர் - படை
3. விறகு - கட்டு
4. சுள்ளி - கற்றை
5. வைக்கோல் - போர்

**4. பொருத்துக. - விடை**

எண்ணுப்பெயர் - எண்

1. பன்னிரண்டு - கஉ
2. ஒன்பது - கூ
3. ஐந்து - ரு
4. பதினைந்து - கரு
5. பதின்மூன்று - கங

**1. தமிழ் வார்த்தைகள்**

| | | | |
|---|---|---|---|
| பாண்ட் | எழுத்துரு | ஈ மெயில் | மின்னஞ்சல் |
| கீ போர்டு | விசைப்பலகை | டேட்டா பேஸ் | செய்திப்தொகுப்பு (தரவுத்தளம்) |
| மல்டி மீடியா கேம்ஸ் | பல்லூடக விளையாட்டுகள் | பைனாரி லேங்குவேஜ் | இருநிலை எண் மொழி |
| இண்டர்நெட் | இணையத்தளம் | மானிட்டர் | கணினித்திரை |
| வேர்ல்ட் வொய்ட் வெப் | உலகளாவிய வலைப்பின்னல் | சாப்ட்வேர் | மென்பொருள் |
| ஷிப்ட் கீ | மாற்றுவிசைக் குமிழி | வெப் சர்ச் என்ஜின் | தேடுபொறிகள் (வலைத் தேடுபொறி) |
| ஹார்டுவேர் | வன்பொருள் | டவுன்லோட் | பதிவிறக்கம் |
| பிளாப்பி | குறுந்தட்டு | சாட்டிங் | கருத்துப் பரிமாற்றம் |

1. **கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. திருவள்ளுவமாலைப்பகுதியில் உள்ள பாடலை இயற்றியவர் கபிலர்
2. திருவள்ளுவமாலையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை ஐம்பத்தைந்து
3. தினையளவு என்னும் பாடலில் அமைந்துள்ள அணுகுமுறை கலீலியோ கலிலியின் அணுகுமுறை
4. நளவெண்பாவை இயற்றியவர் புகழேந்தி
5. புகழேந்திப்புலவரை ஆதரித்த வள்ளல் சந்திரன் சுவர்க்கி

2. **ஓரிரு சொற்களில் விடையளிக்க.**

1. சுயம்வரம் என்பது என்ன?

விடை: தனக்கேற்ற மணமகனைத் தானே தேர்ந்தெடுத்தல்.

2. புகழேந்திப்புலவர் வாழ்ந்த காலத்தைக் குறிப்பிடுக

விடை: கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டு

3. தமயந்தி, யாருக்கு மாலையிட விரும்பினாள்?

விடை: நளனுக்கு

4. நளவெண்பாவில் குறிப்பிடப்படும் அங்கநாட்டின் வளம் யாது?

விடை: கடல்வளம்

5. 'வெண்பாவிற் புகழேந்தி' எனப் புகழேந்திப்புலவர் போற்றப்படக் காரணம் யாது?

விடை: வெண்பா யாப்பில் காப்பியப் பொருளைத் தொடர்நிலைச் செய்யுள்களால் பாடியமை.

1. **பொருள் கூறுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தியங்கி | - | மயங்கி | மதியம் | - | நிலவு |
| சம்பு | - | நாவல் | புகன்றாள் | - | கூறினாள் |

2. **பிரித்து எழுதுக.**

மலர்க்கரம் - மலர் + கரம்

குவியுமென்று - குவியும் + என்று

3. **சேர்த்து எழுதுக**

வான் + உறு - வானுறு

பழம் + தான் - பழந்தான்

4. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. சம்புவின் கனி எனக் குறிக்கப்படுவது நாவற்பழம்
2. பெண்ணின் முகத்திற்கு நிலவு ஒப்புமையாய்க் காட்டப்பட்டுள்ளது.

5. **பொருத்துக.**

வண்டு - தாமரை

மங்கையின் முகம் - நாவற்பழம்

மலர்க்கரம் - வான்நிலவு

**விடை:**

வண்டு - நாவற்பழம்

மங்கையின் முகம் - வான்நிலவு

மலர்க்கரம் - தாமரை

1. **பொருள் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாய்மை | - | உண்மை | கதிரவன் | - | சூரியன் |
| சேய்மை | - | தொலைவு | வண்மை | - | வள்ளல் தன்மை |
| தவம் | - | பெரும்பேறு | துலங்குதல் | - | விளங்குதல் |
| களையும் | - | நீக்கும் | தாள்மலர் | - | பாதம் |
| கருணை | - | இரக்கம் | | | |

2. **பிரித்து எழுதுக.**

செங்கதிரவன் - செம்மை + கதிரவன்

தாய்மையன்பு - தாய்மை + அன்பு

3. **சேர்த்து எழுதுக**

| | | | | |
|---|---|---|---|---|
| பாரதம் | + தாய் | - | பாரதத்தாய் |
| சேய்மை | + உற்ற | - | சேய்மையுற்ற |

4. **எதிர்சொல் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாய்மை | x | பொய்ம்மை | அறம் | x | மறம் |
| தீமை | x | நன்மை | சேய்மை | x | அண்மை |

5. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. காந்திபுராணம் இயற்றியவர் அசலாம்பிகை அம்மையார்
2. காந்திபுராணத்தின் பாட்டுடைத் தலைவர் மகாத்மா காந்தி

1. **பிரித்து எழுதுக**

| | | | |
|---|---|---|---|
| ஐயாயிரம் | - | ஐந்து | + ஆயிரம் |
| வேடமணிந்து | - | வேடம் | + அணிந்து |
| சிறையிலடைத்த | - | சிறையில் | + அடைத்த |
| தென்னாடு | - | தெற்கு | + நாடு |
| ஆயுதப்பயிற்சி | - | ஆயுதம் | + பயிற்சி |
| குடும்பச்சொத்து | - | குடும்பம் | + சொத்து |
| பெண்ணடிமை | - | பெண் | + அடிமை |

2. **சேர்த்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| விடுதலை | + உணர்வு | - | விடுதலையுணர்வு |
| அறம் | + போராட்டம் | - | அறப்போராட்டம் |
| தொழில் | + பயிற்சி | - | தொழிற்பயிற்சி |
| நாடு | + எங்கும் | - | நாடெங்கும் |

3. **கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி வேலுநாச்சியார்
2. வேலுநாச்சியார் பிறந்த ஆண்டு கி.பி. 1730
3. சிவகங்கையை ஆண்ட மன்னர் முத்துவடுகநாதர்

4. அஞ்சலையம்மாள் மகளுக்குக் காந்தியடிகள் இட்ட பெயர் லீலாவதி

5. சீனிவாச காந்தி நிலையம் அமைத்தவர் அம்புஜத்தம்மாள்

6. வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று 1780 ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

7. அஞ்சலையம்மாள் 1921ஆம் ஆண்டு தமது பொது வாழ்க்கையைத் தொடங்கினார்.

8. அம்புஜத்தம்மாள், அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான தோற்றத்தினால் கவரப்பட்டு, எளிமையாய் வாழ்ந்தார்.

**1. உரிய விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.**

1. வளர்பிறை என்பது

அ. பண்புத்தொகை **ஆ. வினைத்தொகை** இ. வேற்றுமைத்தொகை

2. செம்மொழி என்பது

**அ. பண்புத்தொகை** ஆ. வேற்றுமைத்தொகை இ. வினைத்தொகை

3. கயல்விழி என்பது

அ. வேற்றுமைத்தொகை **ஆ. உவமைத்தொகை** இ. பண்புத்தொகை

4. மா,பலா, வாழை என்பது

அ. வினைத்தொகை ஆ. உம்மைத்தொகை **இ. உவமைத்தொகை**

**2. பொருத்துக**

| | | |
|---|---|---|
| வினைத்தொகை | - | நாலிரண்டு |
| உவமைத்தொகை | - | செய்தொழில் |
| உம்மைத்தொகை | - | பவளவாய் பேசினாள் |
| அன்மொழித்தொகை | - | மதிமுகம் |

**விடை:**

| | | |
|---|---|---|
| வினைத்தொகை | - | செய்தொழில் |
| உவமைத்தொகை | - | மதிமுகம் |
| உம்மைத்தொகை | - | நாலிரண்டு |
| அன்மொழித்தொகை | - | பவளவாய் பேசினாள் |

3. **பின்வரும் சொற்கள் எவ்வகைத் தொகைநிலைத் தொடர்கள்?**

| | | |
|---|---|---|
| கருங்கண் | - | பண்புத்தொகை |
| வெற்றிலைபாக்கு | - | உம்மைத்தொகை |
| புத்தகம் படித்தான் | - | வேற்றுமைத்தொகை |
| வளர்புகழ் | - | வினைத்தொகை |
| மலர்முகம் | - | உவமைத்தொகை |
| பொற்றொடி வந்தாள் | - | அன்மொழித்தொகை |

1. **கண்ணன் வந்தான் என்பது எழுவாய்த்தொடர். இதுபோலப் பிற தொகாநிலைத் தொடர்கள் வரும்படி கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. விளித்தொடர் : கண்ணா! வா
2. பெயரெச்சத்தொடர் : வந்த கண்ணன்
3. வினைமுற்றுத்தொடர் : வந்தான் கண்ணன்
4. வினையெச்சத்தொடர் : நடந்து வந்தான்
5. வேற்றுமைத்தொடர் : வீட்டைக் கட்டினான்

1. **பொருத்துக.**

1. வினைமுற்றுத்தொடர் - உடைந்த நாற்காலி
2. விளித்தொடர் - வந்து நின்றான்
3. பெயரெச்சத்தொடர் - கண்ணா வா!
4. வினையெச்சத்தொடர் - வந்தான் இராமன்

**விடை:**

1. வினைமுற்றுத்தொடர் - வந்தான் இராமன்
2. விளித்தொடர் - கண்ணா வா
3. பெயரெச்சத்தொடர் - உடைந்த நாற்காலி
4. வினையெச்சத்தொடர் - வந்து நின்றான்

2. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. மரக்கிளை <u>மடமட</u> என முறிந்தது
2. தங்கம் <u>பளபள</u> என மின்னுகிறது.
3. வா வா வா என்பது <u>அடுக்குத்தொடர்</u> ஆகும்

3. **உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. மாற்றப் பிற என்னும் தொடரில் 'மற்று' என்பது ..............................

அ. உரிச்சொல் **ஆ. இடைச்சொல்** இ. பெயர்ச்சொல்

2. சாலப் பசித்தது என்பது ........................... தொடர்.

அ. இடைச்சொல் **ஆ. உரிச்சொல்** இ. வினைச்சொல்

3. கூடிப் பேசினர் என்னும் தொடர் ............................. ஆகும்.

அ. வினைமுற்றுத்தொடர் ஆ. பெயரெச்சத்தொடர் **இ. வினையெச்சத்தொடர்**

| நூல்கள் | | இயற்றியவர் |
|---|---|---|
| 1. இளங்கோவடிகள் | - | சிலப்பதிகாரம் |
| 2. சீத்தலைச்சாத்தனார் | - | மணிமேகலை |
| 3. திருத்தக்கதேவர் | - | சீவகசிந்தாமணி |
| 4. கம்பர் | - | கம்பராமாயணம் |
| 5. திருவள்ளுவர் | - | திருக்குறள் |
| 6. வில்லிபுத்தூரார் | - | வில்லிபாரதம் |
| 7. பாரதியார் | - | பாஞ்சாலி சபதம் |
| 8. எச்.ஏ.கிருட்டினப்பிள்ளை | - | இரட்சணிய யாத்திரிகம் |
| 9. நல்லாதனார் | - | திரிகடுகம் |
| 10. திரிகூட இராசப்பக்கவிராயர் | - | குற்றாலக்குறவஞ்சி |
| 11. குமரகுருபரர் | - | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் |
| 12. பெ.சுந்தரம்பிள்ளை | - | மனோன்மணீயம் |

1. **பொருள் தருக.**

1. நுகர் - உண்

2. கனி - பழம்
3. கரம் - கை
4. தாள்மலர் - பாதம்
5. கருணை - இரக்கம்

**ஆ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. விவேகசிந்தாமணிப்பாடலில் நாவற்பழத்திற்கு ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ள உயிரி வண்டு
2. அசலாம்பிகை அம்மையார் திண்டிவனத்திற்கு அருகிலுள்ள இரட்டணை என்னுமிடத்தில் பிறந்தார்.
3. பாரதத்தாய் பாடலில் குறிப்பிடப்படும் தாய்மையுள்ளம் கொண்டவர் காந்தியடிகள்
4. இரண்டாம் வேற்றுமைக்குரிய உருபு ஐ
5. பாம்பு பாம்பு என்பது அடுக்குத் தொடர்

**1. பொருள் எழுதுக.**

திடம் - உறுதி உபாயம் - வழிவகை

மெய்ஞ்ஞானம் - மெய்யறிவு

**2. பிரித்து எழுதுக.**

மெய்ஞ்ஞானம் - மெய் + ஞானம்

உடம்பார் - உடம்பு + ஆர்

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. திருமந்திரத்தை இயற்றியவர் திருமூலர்
2. திருமந்திரத்தில் புகழ்மிக்க தொடர் ஒன்றே குலம் ஒருவனே தேவன்

**1. பொருள் எழுதுக.**

நகை - புன்னகை முகை - மொட்டு

மேனி - உடல்

**2. பிரித்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்றுற | - | ஒன்று | + | உற |
| முத்திடல் | - | முத்து | + | இடல் |
| கோலமிட்டு | - | கோலம் | + | இட்டு |

3. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. தேம்பாவணி நூலின் ஆசிரியர் வீரமாமுனிவர்
2. வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி
3. வீரமாமுனிவர் இத்தாலி நாட்டைச் சார்ந்தவர்

1. **பிரித்து எழுதுக**

| | | | | |
|---|---|---|---|---|
| தேசியப்பாடல் | - | தேசியம் | + | பாடல் |
| அரங்கேற்றம் | - | அரங்கு | + | ஏற்றம் |
| கழையழகு | - | கதை | + | அழகு |
| ஏட்டிலக்கியம் | - | ஏடு | + | இலக்கியம் |
| நாடகக்கலை | - | நாடகம் | + | கலை |
| நூற்றாண்டு | - | நூறு | + | ஆண்டு |
| இயற்றமிழ் | - | இயல் | + | தமிழ் |
| ஈராயிரம் | - | இரண்டு | + | ஆயிரம் |
| பெருந்தொண்டு | - | பெருமை | + | தொண்டு |
| கவிதையழகு | - | கவிதை | + | அழகு |
| நாடகம் | - | நாடு | + | அகம் |

2. **சேர்த்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் | + | பண்பு | - | தமிழ்ப்பண்பு |
| பெருமை | + | ஆசிரியர் | - | பேராசிரியர் |
| எட்டு | + | தொகை | - | எட்டுத்தொகை |
| சிறப்பு | + | இடம் | - | சிறப்பிடம் |
| நிழல் | + | பாவை | - | நிழற்பாவை |

| | | | | |
|---|---|---|---|---|
| மூன்று | + | தமிழ் | - | முத்தமிழ் |
| உயிர் | + | அற்ற | - | உயிரற்ற |
| செல்வம் | + | குடி | - | செல்வக்குடி |
| நடிப்பு | + | கலை | - | நடிப்புக்கலை |
| புதுமை | + | உயிர் | - | புத்துயிர் |

3. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. 'நாடகமேத்தும் நாடகக்கணிகை' எனக் குறிப்பிடப்படுபவர் மாதவி
2. 'தமிழ்நாடகத் தந்தை' எனப் போற்றப்படுபவர் பம்மல் சம்பந்தனார்
3. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர் அடியார்க்கு நல்லார்.
4. மறைமலையடிகள் எழுதிய நாடகம் சாகுந்தலம்.
5. மதுரையில் 1942 ஆம் ஆண்டில் புலமைக்கடலான தமிழ் மூதாட்டி ஔவையார் நாடகம் அரங்கேறியது
6. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்துறைக்குப் பெருந்தொண்டு புரிந்தவர் சங்கரதாசு சுவாமிகள்

1. **சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.**

1. சினையின் பெயர் முதலுக்கு ஆகி வருவதை ஆகுபெயர் என்பர்.

**அ. சினை** ஆ. பெருள் இ. முதல் ஈ. பண்பு

2. 'ஊர் திரண்டது' என்னும் தொடரிலல் அமைந்துள்ள ஆகு பெயர் ......................

அ) காலவாகுபெயர் **ஆ) இடவாகுபெயர்**

இ) பண்பாகுபெயர் ஈ) பொருளாகுபெயர்

3. பொருளாகுபெயருக்குப் பொத்தமான எடுத்துக்காட்டு ....................

அ) தலைக்கு ஒரு பழம் கொடு **ஆ) தாமரை முகம்**

இ) கார்த்திகை பூத்தது ஈ) பொங்கல் உண்டான்

4. 'சுண்டல் விற்றான்' என்னும் தொடரில் அமைந்துள்ள ஆகு பெயர் .....................

**அ) தொழிலாகுபெயர்** ஆ) பொருளாகுபெயர்

இ) இடவாகுபெயர் ஈ) பண்பாகுபெயர்

5. 'தலைக்கொரு பழம் கொடு' என்ற தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் ……………………

அ) பொருளாகுபெயர் **ஆ) சினையாகுபெயர்**

இ) இடவாகுபெயர் ஈ) பண்பாகுபெயர்

6. இக்குளத்தில் தாமரை படர்ந்துள்ளது. இதில் 'தாமரை' என்பது

அ) சினைப்பெயர் **ஆ) பொருளாகுபெயர்**

இ) பொருட்பெயர் ஈ) இடப்பெயர்

**2. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக**

1. முதலின் பெயர் உறுப்புக்கு ஆகிவருவது முதல் ஆகுபெயர்.
2. காலத்தின் பெயர் அக்காலத்தோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகிவரும் போது கால ஆகுபெயராகும்.
3. பண்பாகுபெயரைக் குண ஆகுபெயர் எனவும் கூறுவர்.
4. ஆரணி விலை குறைவு என்று கூறினாள். - இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் இடவாகுபெயர்
5. 'காந்தியடிகள் மறைவால் உலகம் அழுதது' - இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் இடவாகுபெயர்

**3. கீழ் உள்ளவற்றைப் பொருத்தி எழுதுக.**

| ஆகுபெயர் வகை | | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. பொருளாகுபெயர் | - | கார் அறுத்தனர் |
| 2. இடவாகுபெயர் | - | வெள்ளை உடுத்தினான் |
| 3. காலவாகுபெயர் | - | உலகம் போற்றியது |
| 4. சினைவாகுபெயர் | - | வெற்றிலை நட்டான் |
| 5. குணவாகுபெயர் | - | பொங்கல் உண்டான் |
| 6. தொழிலாகுபெயர் | - | ஒரு லிட்டர் ஊற்று |
| | - | தலைக்கு ஒன்று கொடு |

**விடை:**

1. பொருளாகுபெயர் - வெற்றிலை நட்டான்
2. இடவாகுபெயர் - உலகம் போற்றியது
3. காலவாகுபெயர் - கார் அறுத்தனர்
4. சினைவாகுபெயர் - தலைக்கு ஒன்று கொடு
5. குணவாகுபெயர் - வெள்ளை உடுத்தினான்
6. தொழிலாகுபெயர் - பொங்கல் உண்டான்

**4. கீழுள்ள தொடர்களில் அமைந்த ஆகுபெயர்களை எடுத்தெழுதி என்ன ஆகுபெயர் எனச் சுட்டுக**

1. வற்றல் வாங்கி வா

விடை: வற்றல் - தொழிலாகுபெயர்

2. வெள்ளை அடித்தான்

விடை: வெள்ளை - பண்பாகுபெயர்

3. குளத்தில் தாமரை படர்ந்துள்ளது.

விடை: தாமரை - முதலாகுபெயர்

4. தாமரை சூடினாள்

விடை: தாமரை - முதலாகுபெயர்

5. உலகம் வருந்தியது.

விடை: உலகம் - இடவாகுபெயர்

6. வகுப்பு அமைதியாயிற்று

விடை: வகுப்பு - இடவாகுபெயர்.

7. டிசம்பர் அழகாய்ப் பூத்துள்ளது.

விடை: டிசம்பர் - காலவாகுபெயர்

8. தலைக்கு ஒரு பழம் கொடு.

விடை: தலைக்கு - சினையாகுபெயர்

9. அழுக்கை வெளுக்கப்போடு.

விடை: அழுக்கை - பண்பாகுபெயர்

5. **கீழுள்ள தொடர்களில் உரிய ஆகுபெயர்ச்சொற்களை நிரப்புக.**

1. உடைந்த ஏரியைப் பார்க்க ஊரே திரண்டு வந்தது. (மக்கள்/**ஊரே**)
2. இவ்வாடைகளை ........................ ஒன்றாய்க் கொடு. (மாணவர்களுக்கு, **தலைக்கு**)
3. தைப்பொங்கலுக்கு ........................ அடிப்பர். (சுண்ணாம்பு, **வெள்ளை**)
4. தேன்மொழி ...................... சூடி வந்தாள். (மல்லிகைப்பூ, **திசம்பர்**)

1. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. ஊர் உறங்கியது என்பது இட ஆகுபெயர்
2. நீலம் சூடினாள் பண்பு ஆகுபெயர்

2. **உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக.**

1. வறுவல் தின்றான் என்பது

அ) முதலாகுபெயர் ஆ) இடவாகுபெயர் **இ) தொழிலாகுபெயர்**

2. சித்திரை வந்தாள்

அ) சினையாகுபெயர் **ஆ) காலவாகுபெயர்** இ) தொழிலாகுபெயர்

3. **பிழைகளை திருத்துக**

1. மயில் கூவ, குயில் அகவியது - மயில் அகவ, குயில் கூவியது.
2. தாமரை, படம் வரைந்தான் - தாமரை, படம் வரைந்தாள்
3. யானைகள் வந்தது - யானைகள் வந்தன.
4. பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தது

- பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தன

5. வயலில் ஆட்டுக்கன்று மேய்கிறது - வயலில் ஆட்டுக்குட்டி மேய்கிறது
6. பசு, குட்டி போட்டது - பசு, கன்று போட்டது
7. மாட்டை இலாயத்தில் கட்டு - மாட்டைத் தொழுவத்தில் கட்டு
8. வெற்றிலைத் தோப்புக்குச் சென்று வெற்றிலை பறித்து வா.

- வெற்றிலைக் கொடிக்காருக்குச் சென்று வெற்றிலை பறித்து வா

9. யானை முழங்கும் - யானை பிளிறும்

**2. பொருத்துக**

1. சிங்கம் கனைத்தது - எண் வழு
2. கண்ணன் படித்தாள் - கால வழு
3. இன்று வருவான் - திணை வழு
4. கபிலன் பேசியது - மரபு வழு
5. பறவைகள் பறந்தது - பால் வழு

**விடை:**

1. சிங்கம் கனைத்தது - மரபு வழு
2. கண்ணன் படித்தாள் - பால் வழு
3. இன்று வருவான் - கால வழு
4. கபிலன் பேசியது - திணை வழு
5. பறவைகள் பறந்தது - எண் வழு

**1. ஓரிரு வரிகளில் பதில் எழுதுக**

1. யாருக்குக் கல்வி வேண்டும்?

**விடை:** பெண்களுக்குக் கல்வி வேண்டும்.

2. பெண்களுக்குக் கல்வி ஏன் வேண்டும்?

**விடை:** உலகிலுள்ள மக்களைக் காப்பதற்கும், கல்வியை மேலும் சிறப்புறச் செய்வதற்கும் பெண்களுக்குக் கல்வி வேண்டும்.

3. கல்வியில்லாத பெண்கள் எதற்கு ஒப்பாவர்?

**விடை:** கல்வியில்லாத பெண்கள் பயனற்ற களர்நிலத்திற்கு ஒப்பாவர்.

4. களர்நிலத்தில் எது விளையும்?

**விடை:** களர்நிலத்தில் சில சமயம் புல் விளையும்.

5. பாடலுக்கேட்ட தலைப்பு இடுக.

**விடை:** பாடலுக்கேற்ற தலைப்பு பெண்கல்வியின் சிறப்பு.

1. **கீழ்க்காணும் வினாத்தொடரினைப் படித்து ஆம்/இல்லை என விடை எழுதுக.**

    1. திருமந்திரம் சைவத் திருமுறைகளுள் பத்தாவது திருமுறையா? - **ஆம்**
    2. தூசையப்பர் இயற்றிய நூல் தேம்பாவணியா? - **இல்லை**
    3. சங்கரதாசு சுவாமிகள் தமிழ்நாடகத் தலைமையாசிரியரா? - **ஆம்**
    4. மதங்கசூளாமணி நூலினை சுவாமி விபுலானந்தர் எழுதினரா? - **ஆம்**
    5. வெற்றிலை நட்டான் என்பது சிலையாகுபெயரா? - **ஆம்**

2. **பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

    1. ஞானோபதேசம், **திருமந்திரம்**, பரமார்ந்த குரு கதை, தொன்னூல் விளக்கம்.
    2. பம்மல் சம்பந்தனார், **ஔவை சண்முகனார்**, சங்கரதாசு சுவாமிகள், பரிதிமாற்கலைஞர்.
    3. செயிற்றியம் முறுவல், **நன்னூல்**, சயந்தம்
    4. பவளக்கொடி, இலவகுசா, **மனோகரன்**, பிரகலாதன்
    5. பொரியல், அவியல், **சித்திரை**, சுண்டல்

1. **பொருள் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தாது | - | மகரந்தம் | பொய்கை | - | இயற்கையான நீர்நிலை |
| சோலை | - | பூங்கா | வனம் | - | காடு |
| போது | - | மலரரும்பு | பூகவனம் | - | பாக்குமரத்தோட்டம் |
| தடங்கள் | - | நீர்நிலைகள் | | | |

2. **பிரித்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| சண்பகக்காடு | - | சண்பகம் | + | காடு |
| வனந்தொறும் | - | வனம் | + | தொறும் |
| போதவிழ் | - | போது | + | அவிழ் |
| உயிரென | - | உயிர் | + | என |

3. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

    1. கம்பர் பிறந்த ஊர் தேரழுந்தூர்
    2. கம்பரை ஆதரித்த வள்ளல் சடையப்ப வள்ளல்

3. கம்பராமாயணத்தில் அமைந்துள்ள காண்டங்களின் எண்ணிக்கை ஆறு

1. **பிரித்து எழுதுக.**

ஒன்றனையொன்று - ஒன்றனை + ஒன்று

ஐம்பூதங்கள் - ஐந்து + பூதங்கள்

புகலிடம் - புகல் + இடம்

ஆறறிவு - ஆறு + அறிவு

விலங்கினம் - விலங்கு + இனம்

வாழிடம் - வாழ் + இடம்

உயிரினங்கள் - உயிர் + இனங்கள்

தீதறியா - தீது + அறியா

மாசடைய - மாசு + அடைய

நறுமணப்பொருள் - நறுமணம் + பொருள்

2. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பழந்தமிழ் இலக்கண நூல் தொல்காப்பியம்
2. மரம் ஓரறிவு உயிர்
3. உலகிலேயே அதிய மழை பெறும் இடம் சிரபுஞ்சி
4. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.
5. உயிரிகளின் ஆற்றலுக்கு அடிப்படையாய் விளங்குவன தாவரங்களே
6. அக்டோபர் முதல்வாரத்தை அரசு வனவிலங்கு வாரமாய்க் கொண்டாடி வருகிறது.

1. **சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.**

1. வினைமுற்றையோ பெயர்ச்சொல்லையோ வினாச்சொல் வினையோ பயனிலையாய்க்கொண்டு முடிவது ..........................

அ. நான்காம் வேற்றுமை ஆ. மூன்றாம் வேற்றுமை

**இ. முதல் வேற்றுமை** ஈ. எட்டாம் வேற்றுமை

2. பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படுபொருளாய் வேறுபடுத்துவது ..............................

அ. மூன்றாம் வேற்றுமை உருபு ஆ. ஏழாம் வேற்றுமை உருபு

இ. நான்காம் வேற்றுமை உருபு **ஈ. இரண்டாம் வேற்றுமை உருபு**

3. ஆசிரியரோடு மாணவன் வந்தான் - இத்தொடரிலுள்ள மூன்றாம் வேற்றுமை உருபு உணர்த்தும் பொருள் ...................................

அ. இயற்றுதல் கருத்தாப்பொருள் ஆ. ஏவுதல் கருத்தாப்பொருள்

**இ. உடனிகழ்ச்சிப்பொருள்** ஈ. கருவிப்பொருள்

4. வளையலுக்குப் பொன் கொடுத்தான - இத்தொடர் உணர்த்தும் பொருள்...........................

அ. கொடைப்பொருள் **ஆ. அதுவாதல் பொருள்**

இ. நேர்ச்சிப் பொருள் ஈ. பொருட்டு என்னும் பொருள்.

5. நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் பொருள்களை உணர்த்தும் வேற்றுமை ..........................

அ. நான்காம் வேற்றுமை ஆ. ஆறாம் வேற்றுமை

**இ. ஐந்தாம் வேற்றுமை** ஈ. மூன்றாம் வேற்றுமை

6. இடப்பொருளை உணர்த்தி வரும் வேற்றுமை ..........................

அ. முதல் வேற்றுமை ஆ. நான்காம் வேற்றுமை

**இ. ஏழாம் வேற்றுமை** ஈ. எட்டாம் வேற்றுமை

**2. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக**

1. முதல் வேற்றுமை கருத்தாப் பொருளை உணர்த்தி வரும்.
2. தலைவர்பொருட்டுச் செயலாளர் பேசினார். - இத்தொடரில் அமைந்துள்ள சொல்லுருபு நான்காம் வேற்றுமைக்கு உரியது.
3. 'அது, ஆது, அ' என்னும் ஆறாம் வேற்றுமை உருபுகள் கிழமைப் பொருளில் வரும்.
4. நண்பருடைய வயல் - இத்தொடரில் வந்துள்ள ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு உடைய
5. விளிப்பொருளில் வருவது எட்டாம் வேற்றுமை

**3. கீழ் உள்ள தொடர்களையும் அவை உணர்த்தும் பொருள்களையும் பொருத்தி எழுதுக.**

| தொடர்கள் | | உணர்த்தும் பொருள்கள் |
|---|---|---|
| 1. வீட்டைக் கட்டினான் | - | அடைதல் |

2. காட்டை அழித்தான் - உடைமை
3. ஊரை அடைந்தான் - கருத்தா
4. அழுக்கை நீக்கினான் - அழித்தல்
5. மயிலைப் போன்றவன் - நீத்தல்
6. வீரத்தை உடையவன் - ஆக்கல்
- ஒத்தல்

**விடை:**

| தொடர்கள் | | உணர்த்தும் பொருள்கள் |
|---|---|---|
| 1. வீட்டைக் கட்டினான் | - | ஆக்கல் |
| 2. காட்டை அழித்தான் | - | அழித்தல் |
| 3. ஊரை அடைந்தான் | - | அடைதல் |
| 4. அழுக்கை நீக்கினான் | - | நீத்தல் |
| 5. மயிலைப் போன்றவன் | - | ஒத்தல் |
| 6. வீரத்தை உடையவன் | - | உடைமை |

**4. நான்காம் வேற்றுமை உணர்த்து பொருள்களுடன் எடுத்துக் காட்டுகளைப் பொருத்துக.**

| பொருள் வகை | | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1. கொடை | - | மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் |
| 2. பகை | - | வளையலுக்குப் பொன் கொடு |
| 3. நேர்ச்சி | - | கூலிக்கு வேலை செய்தான் |
| 4. தகவு | - | இராமனுக்குத் தம்பி பரதன் |
| 5. அதுவாதல் | - | அவன் முறுக்குத் தின்றான் |
| 6. பொருட்டு | - | பாரிக்கு நண்பர் கபிலர் |
| 7. முறை | - | எலிக்குப் பகை பூனை |
| | - | வேலைக்குக் கூலி கொடு. |

**விடை:**

| பொருள் வகை | | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1. கொடை | - | வேலைக்குக் கூலி கொடு. |
| 2. பகை | - | எலிக்குப் பகை பூனை |
| 3. நேர்ச்சி | - | பாரிக்கு நண்பர் கபிலர். |
| 4. தகவு | - | மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் |
| 5. அதுவாதல் | - | வளையலுக்குப் பொன் கொடு |
| 6. பொருட்டு | - | கூலிக்கு வேலை செய்தான் |
| 7. முறை | - | இராமனுக்குத் தம்பி பரதன் |

**1. உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.**

1. வினைமுற்று, பெயர்ச்சொல், வினாச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாய்க்கொண்டு முடிவது

அ. நான்காம் வேற்றுமை ஆ. இரண்டாம் வேற்றுமை

**இ. முதல் வேற்றுமை** ஈ. ஆறாம் வேற்றுமை

2. பெயர்ச்சொல்லைக் கருத்தாவாய் மாற்றுவது ..........................

அ. முதல் வேற்றுமை ஆ. மூன்றாம் வேற்றுமை

**இ. இரண்டாம் வேற்றுமை** ஈ. ஐந்தாம் வேற்றுமை

3. கிழமைப்பொருளில் வருவது

அ. மூன்றாம் வேற்றுமை **ஆ. ஆறாம் வேற்றுமை**

இ. எட்டாம் வேற்றுமை ஈ. ஐந்தாம் வேற்றுமை

4. இராமனுக்குத் தம்பி இலக்குவன் - இதிலுள்ள வேற்றுமை உருபு .................... பொருளில் வந்துள்ளது.

அ. கொடை ஆ. பகை இ. நட்பு **ஈ. முறை**

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. இரண்டாம் வேற்றுமை உருபு செயப்படுபொருள் வேற்றுமை எனவும் அழைக்கப்பெறும்.

2. கருவி, கருத்தா ஆகிய பொருள்களில் ஆல், ஆன் உருபு வரும்

3. ஐந்தாம் வேற்றுமையில் வரும் 'இல்' உருபு ஏதுப் பொருளில் வரும்
4. எட்டாம் வேற்றுமை விளிப் பொருளில் வரும்.
5. வாலிக்குப் பகைவன் சுக்ரீவன் - இத்தொடரில் உள்ள 'கு' உருபு பகை என்னும் பொருளில் வந்துள்ளது.
6. முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை

**2. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. காட்டை அழித்தான் | - | ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு |
| 2. புலியைப் போன்றவன் | - | பொருட்டு |
| 3. கூலியின் பொருட்டு வேலை | - | அழித்தல் |
| 4. என்னுடைய வீடு | - | ஒத்தல் |
| | - | எல்லை |

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. காட்டை அழித்தான் | - | அழித்தல் |
| 2. புலியைப் போன்றவன் | - | ஒத்தல் |
| 3. கூலியின் பொருட்டு வேலை | - | பொருட்டு |
| 4. என்னுடைய வீடு | - | ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு |

**1. பொருள் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாய்வது | - | அழிவது | நயமில | - | தீங்கு |
| மண்புக்கு | - | மண்ணிற்குள் புதைந்து | ஞாலம் | - | உலகம் |
| கலம் | - | பாத்திரம் | | | |
| அரம் | - | வாளைக் கூர்மையாக்கும் கருவி | | | |

**2. பிரித்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| எளிதென்ப | - | எளிது | + என்ப |
| பயனுடையார் | - | பயன் | + உடையார் |
| பண்புடைமை | - | பண்பு | + உடைமை |

| | | | |
|---|---|---|---|
| பண்புடையார் | - | பண்பு | + உடையார் |
| மக்களொப்பு | - | மக்கள் | + ஒப்பு |
| இவ்விரண்டும் | - | இ | + இரண்டும் |
| உறுப்பொத்தல் | - | உறுப்பு | + ஒத்தல் |
| அதுவின்றேல் | - | அது | + இன்றேல் |
| கலந்தீமை | - | கலம் | + தீமை |
| மக்கட்பண்பு | - | மக்கள் | + பண்பு |
| நன்பால் | - | நன்மை | + பால் |

3. **சேர்த்து எழுதுக**

| | | |
|---|---|---|
| அன்பு | + உடைமை | - அன்புடைமை |
| மக்கள் | + பண்பு | - மக்கட்பண்பு |
| பண்பு | + ஒத்தல் | - பண்பொத்தல் |
| பண்பு | + இலான் | - பண்பிலான் |
| திரிந்து | + அற்று | - திரிந்தற்று |

**எதிர்ச்சொல் அறிக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எளிது | x | அரிது | பாராட்டு | x | இகழ் |
| பகை | x | நட்பு | பயனுடையார் | x | பயனிலார் |
| நகை | x | அழுகை | பகல் | x | இரவு |

1. **பொருள் எழுதுக.**

1. இரந்தும் - யாசித்தும்
2. அயர்ந்த - சோர்ந்த
3. பசியறாது - பசி நீங்காது

2. **பிரித்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| கண்டபோதெல்லாம் | - | கண்டபோது + எல்லாம் |
| வீடுதோறிரந்தும் | - | வீடுதோறும் + இரந்தும் |

| | | | | |
|---|---|---|---|---|
| பசியறாது | - | பசி | + | அறாது |
| கண்டுளம் | - | கண்டு | + | உளம் |

**3. சேர்த்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| நேர் | + | உற | - | நேருற |
| நெஞ்சு | + | இளைத்தவர் | - | நெஞ்சிளைத்தவர் |

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. திருவருட்பாவை இயற்றியவர் இராமலிங்க அடிகளார்
2. திருவருட்பாவில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை ஐயாயிரத்து எண்ணூற்றுப் பதினெட்டு.

**1. பிரித்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| வானியல் | - | வான் | + | இயல் |
| தென்திசை | - | தெற்கு | + | திசை |
| ஐம்பூதம் | - | ஐந்து | + | பூதம் |
| பழந்தமிழர் | - | பழமை | + | தமிழர் |
| வானூர்தி | - | வான் | + | ஊர்தி |
| உள்ளடக்கியது | - | உள் | + | அடக்கியது |
| தமிழ்க்குரல் | - | தமிழ் | + | குரல் |
| செந்நிறம் | - | செம்மை | + | நிறம் |
| செயற்கைக்கோள் | - | செயற்கை | + | கோள் |
| நீலவானம் | - | நீலம் | + | வானம் |

**2. சேர்த்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| காலம் | + | தோறும் | - | காலந்தோறும் |
| செம்மை | + | ஞாயிறு | - | செஞ்ஞாயிறு |
| மயில் | + | பொறி | - | மயிற்பொறி |
| பெருமை | + | புலமை | - | பெரும்புலமை |

| | | | |
|---|---|---|---|
| கணித்து | + | கூறினார் | - கணித்துக் கூறினார் |
| ஒளி | + | ஊட்டும் | - ஒளியூட்டும் |
| கண்டு | + | அறிந்த | - கண்டறிந்த |
| தமிழ் | + | இலக்கியம் | - தமிழிலக்கியம் |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது வானியல்
2. உலகம் ஐம்பூதங்களால் ஆனது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.
3. 'உலகம் உருண்டை வடிவமானது' எனக் கூறிய முதல் தமிழ்க்குரல் திருவள்ளுவர்
4. வான்வெளியில் உள்ள மிகப்பெரிய விண்மீன் ஞாயிறு
5. தானே ஒளிவிடக்கூடியது நாள்மீன் எனப்பட்டது.
6. செந்நிறமாய் இருந்த கோளைச் செவ்வாய் என்றனர்.
7. வெண்மை நிறமுடைய கோள் வெள்ளி எனப்பட்டது.
8. வானில் பெரிய கோளாய் வலம் வருவதையே வியாழன் என்றனர்.

**4. விடுபட்ட இடங்களை நிரப்புக**

1. வாழை + பழம் = வாழைப்பழம்
2. வட்டம் + பலகை = வட்டப்பலகை
3. பசுமை + கூழ் = பைங்கூழ்
4. பனை + மரம் = பனைமரம்

**1. பொருத்துக.**

1. இயல்புபுணர்ச்சி - பாடம் + வேளை
2. தோன்றல் - பொன் + குடம்
3. திரிதல் - வாழை + குலை
4. கெடுதல் - தமிழ் + மண்

**விடை:**

1. இயல்புபுணர்ச்சி - தமிழ் + மண் - தமிழ்மண்

2. தோன்றல் - வாழை + குலை - வாழைக்குலை

3. திரிதல் - பொன் + குடம் - பொற்குடம்

4. கெடுதல் - பாடம் + வேளை - பாடவேளை

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் சேர்வதற்குப் புணர்ச்சி என்று பெயர்.

2. அல் + திணை என்பது அஃறிணை எனப் புணரும்.

3. தோன்றல், திரிதல், கெடுதல் என்பன விகாரப் புணர்ச்சி ஆகும்.

**3. உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.**

1. வாழை + தோட்டம் என்பது ………………… புணர்ச்சி

அ) இயல்பு **ஆ) விகாரப்** இ) திசைப் பெயர்ப்

2. நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இல்லாமல் புணர்வது …………………

**அ) இயல்பு புணர்ச்சி** ஆ) விகாரப்புணர்ச்சி இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி

3. விகாரப் புணர்ச்சி ……………………………. வகைப்படும்

அ) ஐந்து ஆ) ஆறு **இ) மூன்று**

**1. தேவையான இடங்களில் வல்லினமெய் இட்டு எழுதுக.**

1. வெள்ளி கிண்ணம் விலையதிகம்.

விடை: வெள்ளி**க்**கிண்ணம் விலையதிகம்.

2. நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளை காட்டும் கண்ணாடி

விடை: நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி

3. தைதிங்கள் நன்னாளில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

விடை: தைத்திங்கள் நன்னாளில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

4. பால்பருக தந்தான்

விடை: பால் பருக**த்** தந்தான்.

5. உறுதியாக செய்வேன் என்று வாக்கு கொடுத்தான்

விடை: உறுதியாகச் செய்வேன் என்று வாக்குக் கொடுத்தான்

6. அந்த பையனா இப்படி சொன்னான்?

விடை: அந்தப் பையனா இப்படிச் சொன்னான்?

7. இந்த செயலை எப்படி செய்தாய்?

விடை: இந்தச் செயலை எப்படிச் செய்தாய்?

**2. வல்லினமெய் சேர்த்தெழுதுக.**

1. தனி + பையன் - தனிப்பையன்
2. இனி + பேசு - இனிப்பேசு
3. நீர் + குடம் - நீர்க்குடம்
4. பாம்பு + தோல் - பாம்புத்தோல்

**1. கீழ்க்காணும் சொற்றொடர்களில் வல்லினம் இட்டும் இடாமலும் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மாற்றத்தை எழுதுக.**

1. நாடித் துடித்தது - கையில் உள்ள நாடியானது துடித்தது
2. தந்த பெட்டி - பிறர் தந்த பெட்டி
3. தந்தப்பெட்டி - தந்தத்தால் ஆன பெட்டி
4. மருந்து கடை - மருந்தும் கடையும்
5. வேலை கொடுத்தான் - பொருளீட்ட வேலை கொடுத்தான்.
6. வேலைக்கொடுத்தான் - வேலாயுதத்தைக் கொடுத்தான்
7. தேரைக் கண்டான் - ஏறிச் செல்லப் பயன்படும் தேரினைக் கண்டான்
8. தேரை கண்டான் - தேரை என்னும் உயிரினத்தைக் கண்டான்

**2. கீழ்க்காணும் சொற்றொடர்களை இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என வகைப்படுத்துக.**

வாழைப்பூ, வீட்டுச்சிறை, விண்மீன், மேற்பரப்பு, தொலைநோக்கி, சிறுகோள், கண்பார்வை, மாலைப்பொழுது, நீலவானம், மயிற்பொறி, வளர்பிறை, பாடநூல், அருட்பா, கலந்தீமை, மக்கட்பண்பு.

| இயல்பு புணர்ச்சி | விகாரப்புணர்ச்சி | | |
|---|---|---|---|
| | தோன்றல் | திரிதல் | கெடுதல் |

| | | | |
|---|---|---|---|
| கண் பார்வை<br>விண்மீன்<br>தொலைநோக்கி<br>வளர்பிறை | வாழைப்பூ<br>மாலைப்பொழுது<br>வீட்டுச்சிறை | மேற்பரப்பு<br>மயிற்பொறி<br>அருட்பா<br>கலந்தீமை<br>மக்கட்பண்பு | சிறுகோள்<br>நீலவானம்<br>பாடநூல் |

1. **ஓரிரு சொற்களில் விடையளிக்கவும்**

அ. அறிவியல் கல்வியில் மிகத் தொன்மையானது எது?

**விடை:** வானியல் கல்வி

2. ஐம்பூதங்களைக் குறிப்பிடுக.

**விடை:** நிலம், நீர், தீ, காற்று, வானம்.

3. சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் எனக் கூறியவர் யார்?

**விடை:** திருவள்ளுவர்

4. வானவெளியில் மிகப்பெரிய விண்மீன் எது?

**விடை:** ஞாயிறு

5. ஞாயிற்றின் பல பெயர்களுள் ஐந்தனை எழுதுக.

**விடை:** சூரியன், பகலவன், வெய்யோன், கதிரவன், பகலோன்.

6. மதி என்னும் சொல்லுக்கு இரு பொருள் தருக.

**விடை:** நிலவு, அறிவு

2. பொருத்துக.

1. கட்டு + சோறு - கட்டுச்சோறு - இயல்பு விகாரம்.
2. கண் + மலர் - கண்மலர் - கெடுதல் விகாரம்
3. வளம் + நூல் - வளநூல் - திரிதல் விகாரம்.
4. முள் + செடி - முட்செடி - தோன்றல் விகாரம்

**விடை:**

1. கட்டு + சோறு - கட்டுச்சோறு - தோன்றல் விகாரம்
2. கண் + மலர் - கண்மலர் - இயல்பு விகாரம்.

3. வளம் + நூல் - வளநூல் - கெடுதல் விகாரம்

4. முள் + செடி - முட்செடி - திரிதல் விகாரம்.

1. பொருள் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| களபம் | - | சந்தனம் | புயம் | - | தோள் |
| துழாய் | - | துளசி | பகழி | - | அம்பு |
| அலங்கல் | - | மாலை | நாமம் | - | பெயர் |

2. பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| திருவுளம் | - | திரு | + உளம் |
| திருப்புயம் | - | திரு | + புயம் |
| பெருந்தவம் | - | பெருமை | + தவம் |
| இருநிலம் | - | இரு | + நிலம் |
| பேருகு | - | பெருமை | + உரு |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வில்லிபாரதத்தைப் பாடியவர் <u>வில்லிபுத்தூரார்</u>
2. வில்லிபுத்தூராரை ஆதரித்தவர் <u>வரபதி ஆட்கொண்டான்</u>

**1. பொருள் எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| மாசு | - குற்றம் | கைம்மாறு | - பயன் |
| மான | - நீங்க | | |

**2. பிரித்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| மாசற | - | மாசு | + அற |
| தன்னினம் | - | தன் | + இனம் |
| தலைனென | - | தலைவன் | + என |

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. கவிஞர் முடியரசனின் இயற்பெயர் <u>துரைராசு</u>
2. முடியரசன் பிறந்த ஊர் <u>பெரியகுளம்</u>

3. தமிழக அரசின் பரிசு பெற்ற முடியரசனின் காவியம் பூங்கொடி

**1. பிரித்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| அரும்பணி | - | அருமை | + | பணி |
| தனி | - | தமிழ் | + | அன்னை |
| தனித்தமிழ் | - | தனி | + | தமிழ் |
| செந்தமிழ் | - | செம்மை | + | தமிழ் + செல்வி |
| நன்றியுணர்வு | - | நன்றி | + | உணர்வு |
| இலக்கியப்பெட்டகம் | - | இலக்கியம் | + | பெட்டகம் |
| பழந்தமிழர் | - | பழமை | + | தமிழர் |
| சொற்றொருப்பு | - | சொல் | + | தொகுப்பு |
| பகுலுணவு | - | பகல் | + | உணவு |
| நிறுவனமொன்றில | - | நிறுவனம் | + | ஒன்றில் |

**2. சேர்த்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| உறுதி | + | உரை | - | உறுதியுரை |
| உணவு | + | இன்றி | - | உணவின்றி |
| சொல் | + | பொழிவு | - | சொற்பொழிவு |
| சொல் | + | ஆராய்ச்சி | - | சொல்லாராய்ச்சி |
| உருவம் | + | சிலை | - | உருவச்சிலை |
| உலகு | + | அறிய | - | உலகறிய |
| ஆல் | + | என | - | ஆலென |
| நான்கு + பத்து | + | மூன்று | - | நாற்பத்து மூன்று |
| பணி | + | ஆற்றிய | - | பணியாற்றிய |
| செருக்கு | + | இல்லாமல் | - | செருக்கில்லாமல் |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற்கலைஞர்

2. சென்னையில் தேவநேயப்பாவாணர் பெயரில் நூலகம் உள்ளது.

3. மதுரையில் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற ஆண்டு 5.1.1981

4. பாவாணர் அரசின் உதவியோடு சொற்பிறப்பியல் அகர முதலியை வெளியிட்டார்.

5. கோவில்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டும்

6. பாவாணர் வறுமையில் வாடினாலும் கையில் பணம் கிடைத்தால் நூல்களே வாங்கினார்.

**1. கீழுள்ளவற்றுள் விடுபட்ட இடங்களை நிரப்புக**

1. பனி + துளி = பனித்துளி
2. பூ + அழகு = பூவழகு
3. மா + இலை = மாவிலை
4. மண் + அகல் = மண்ணகல்

**2. பொருத்துக.**

1. இடை + அழகு - மெய்முன் மெய்
2. மண் + அகல் - உயிர்முன் மெய்
3. கிளி + மூக்கு - மெய்முன் உயிர்
4. மரம் + கிளை - உயிர்முன் உயிர்

**விடை:**

1. இடை + அழகு - உயிர்முன் உயிர்
2. மண் + அகல் - மெய்முன் உயிர்
3. கிளி + மூக்கு - உயிர்முன் மெய்
4. மரம் + கிளை - மெய்முன் மெய்

**3. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. பாடும் பாடல் - இத்தொடரில் பாடல் என்பது ..........................

அ) நிலைமொழி **ஆ) வருமொழி** இ) பொதுமொழி

2. பலவாண்டு - இச்சொல் பிரியும் முறை ..............................

அ) பல் + ஆண்டு ஆ) பல + வாண்டு **இ) பல + ஆண்டு**

3. பனை + ஓலை - இரண்டிற்கும் இடையில் தோன்றும்

அ) வ் **ஆ) ய்** இ) எதுவுமில்லை

**1. வல்லினமெய் இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. சித்திரை திங்களில் வந்து பார்க்கும்படிக் கூறினார்.

**விடை** : சித்திரைத் திங்களில் வந்து பார்க்குபடி கூறினார்

2. வ.உ.சிதம்பரனார்ச் செற்ந்நன்றி மறவா செம்மல் ஆவார்.

**விடை** : வ.உ.சிதம்பரனார் செய்ந்தன்றி மறவாச் செம்மல் ஆவார்.

3. இராமன் மாயமானை தேடி சென்றான்.

**விடை** : இராமன் மாயமானை**த்** தேடி**ச்** சென்றான்.

4. சொற்களை பகாபதம் பகுப்பதம் என இருவகை படுத்துவர்.

**விடை** : சொற்களைப் பகாப்பதம் பகுபதம் என இருவகைப் படுத்துவர்.

5. சிரிக்க தெரியாதவர்களுக்கு பகல்பொழுதும் இருள் ஆகும்.

**விடை** : சிரிக்கத் தெரியாதவர்களுக்குப் பகல்பொழுதும் இருள் ஆகும்.

**2. அரபு எண்ணுடன் பொருந்தாத தமிழெண்ணை வட்டமிடுக.**

1. க - 1
2. உ - 2
3. கஉ - 17
4. ரு - 5
5. உ0 - 10

**விடை:** கஉ - 17, உ0 - 10

1. ஒரு பொருள் உணர்த்தும் பல சொற்கள் கொடுக்கட்டுள்ளன அவற்றைப் பொருத்துக.

| **வ. எண்** | **ஒரு பொருள்** | **பல சொற்கள்** |
|---|---|---|
| 1 | மிகுதி | கூறு, விளம்பு, மொழி, இயம்பு, உரை |
| 2 | பேசு | ஞாயிறு, கதிரவன், பரிதி, பகலவன், வெய்யோன் |
| 3. | சூரியன் | சால, தவ, நனி, கூர், கழி |

| | | |
|---|---|---|
| 4. | குழந்தை | புவி, தரணி, நானிலம், பார், வையம் |
| 5. | உலகம் | பிள்ளை, குழவி, மகவு, சேய் |

1. கீழ்க்காணும் விடைக்குறிப்புகளைக்கொண்டு, கட்டங்களில் மேலும் கீழும், குறுக்கும் நெடுக்கும், இடமும் வலமும் இடம் பெற்றுள்ள சொற்களைக் கண்டறிந்து வட்டமிடுக. வட்டமிட்ட சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தா | ள் | உ | லை | மா | ச |
| யா | கா | ள் | று | ஆ | ந் |
| ன் | த் | ள | த | ம | த |
| ல் | அ | ம் | பு | க | ன |
| டு | ம | பெ | ய | ர் | ம் |
| ஏ | தி | சி | ய் | ழா | து |

1. பாதம் என்னும் வடசொல்லுக்குரிய தமிழ்ச்சொல் தாள்
2. மனம், நெஞ்சு, உள்ளம் என்றாலும் ஒரே பொருள்
3. திருமாலுக்கு அணிவிக்கும் மாலை துழாய்
4. உடலில் சந்தனம் பூசினால் மணம் வீசும்; குளிர்ச்சி தரும்
5. வில், அம்பு இவ்விரண்டனையும் தனித்தனியாகப் பயன்படுத்துதல் இயலாது.
6. நாமம் என்பதன் தமிழ்ச்சொல் பெயர்
7. மதியினால் சதியை வெல்லலாம் என்பர்
8. நான் என்னும் சொல்லின் திரிபு யான்
9. நதி என்பதன் தமிழ்ச்சொல் ஆறு
10. அலங்கல் என்பதன் பொருள் மாலை

**1. கீழ்க்காணும் தொடர்களில் கோடிட்ட இடத்தில் உரிய மயங்கொலிச் சொற்களைக்கொண்டு நிரப்புக.**

1. 'இன்று பனிப்பொழிவு மிகுதியாக உள்ளதனால், இரவுப் பணி செய்வது கடினம்' எனக் கண்ணன் கூறினான். (பணி,பனி)
2. வேல்விழி கோடை விடுமுறையைக் **களி**ப்புடன் **கழி**க்க விரும்பினாள். (கலி, கழி, களி)

winmeen.com

3. வளி சுழன்று வீசியதனார் வழி தவறிய வளவன் கல்லில் மோதிக் கீழே விழுந்து வலியால் துடித்தான். (வளி, வழி, வலி)

4. யாரோ தன்னை **விளி**க்கும் குரல் கேட்ட முருகன், கண் **விழி**த்துப் பார்த்தான். (விளி, விழி)

5. **ஏரி**யில் நீர் நிரம்பியதனைக் காண விரும்பிய எழிலன் அருகில் இருந்த மரத்தின்மீது **ஏறி**னான். (ஏரி, ஏறி)

6. பரந்துபட்ட **பரவை**யின்மீது **பறவை** பறந்து சென்றது. (பரவை, பறவை)

7. **மாரி** பொய்த்ததனால் மனம் வருந்திய மக்கள் இடம் **மாறி**ச்சென்றனர். (மாரி, மாறி)

8. **மழை**யின் ஒரு பகுதியில் மட்டுமே **மலை** பெய்தது. (மழை, மலை)

9. ஆடையில் **கறை** இருப்பதனைக் கண்ட முகிலன், அதனை நீக்குவதற்காக அருகில் இருந்த ஆற்றங்**கரை**க்குச் சென்றான். (கரை, கறை)

10. வயலில் **விளை**ந்த சோளக்கதிர்களை **விலை**க்கு விற்க வளவன் முடிவெடுத்தான். (விளை,விலை)

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வான் பெற்ற நதி கங்காநதி
2. துழாய் அலங்கல் என்பதன் பொருள் துளசியால் ஆன மாலை
3. காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்
4. தாழ்ச்சி என்பதன் எதிர்ச்சொல் உயர்ச்சி
5. அடிமையலன் - இச்சொல்லைப் பிரிக்கும் முறை அடிமை + அலன்

**2. ஓரிரு சொற்களில் விடையளிக்கவும்**

1. 'மன்னிப்பு' - இச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் யாது?

**விடை**: பொறுத்தல்

2. பகலுணவு, இராவுணவு குறித்துப் பாவாணர் யாது கூறுகின்றார்?

**விடை**: பகல் உணவு - பகலில் கிடைத்த சிறிதளவு உணவு. இராவுணவு - உணவு கிட்டாத இரவு என்னும் பொருளில் பாவாணர் குறிப்பிட்டார்.

3. பாவாணர் எழுதிய நூல்களுள் இரண்டனைக் குறிப்பிடுக.

**விடை**: தமிழர் வரலாறு, தமிழர் மதம்

4. தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் யார்?

**விடை**: கால்டுவெல்

5. தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் யார்?

**விடை**: தேவநேயப்பாவாணர்.

1. **பொருள் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அமுதம் | - | குளிர்ச்சி | கிரணம் | - | ஒளி |
| நெகிழ | - | இளக | உதயம் | - | தோற்றம் |
| மதுரம் | - | இனிமை | சலதி | - | கடல் |
| புவனம் | - | உலகு | மதலை | - | குழந்தை, புதல்வன் |
| பருதி | - | ஞாயிறு | நறவம் | - | தேன் |

2. **பிரித்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| அமுதகிரணம் | - | அமுதம் + கிரணம் |
| பிள்ளைத்தமிழ் | - | பிள்ளை + தமிழ் |
| அலகில் | - | அலகு + இல் |
| அறிவுள் | - | அறிவு + உள் |

3. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழை இயற்றியவர் குமரகுருபரர்

2. இறைவனையோ நல்லாரையோ பாட்டுடைத்தலைவராய்க் கொண்டு அவரைக் குழந்தையாய்க் கருதிப் பாடப்படும் சிற்றிலக்கிய வகை பிள்ளைத்தமிழ்

3. பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்களின் எண்ணிக்கை பத்து

4. பிள்ளைத்தமிழ் சிற்றிலக்கிய வகைப்படும்

5. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்ப் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல் வருகைப் பருவத்தில் அமைந்துள்ளது.

1. **பிரித்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| நகைச்சுவை | - | நகை + சுவை |

| | | | |
|---|---|---|---|
| மண்ணுலகம் | - | மண் | + உலகம் |
| உள்ளொதுங்கி | - | உள் | + ஒதுங்கி |
| புத்துணர்ச்சி | - | புதுமை | + உணர்ச்சி |
| சிற்றிலக்கியம் | - | சிறுமை | + இலக்கியம் |
| இலக்கியச்சுவை | - | இலக்கியம் | + சுவை |
| வானுலகம் | - | வான் | + உலகம் |
| அழகுற | - | அழகு | + உற |
| பழங்காலம் | - | பழமை | + காலம் |

**2. சேர்த்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| அங்கும் | + இங்கும் | - அங்குமிங்கும் |
| வால் | + எங்கே | - வாலெங்கே |
| இயற்கை | + அன்னை | - இயற்கையன்னை |
| குரங்கு | + அரசர் | - குரங்கரசர் |
| குருதி | + ஓட்டம் | - குருதியோட்டம் |
| நெடுமை | + நேரம் | - நெடுநேரம் |
| நன்கு | + அறிவான் | - நன்கறிவான் |
| இரண்டு | + பொருள் | - இருபொருள் |
| முன்னேற்றம் | + அடைய | - முன்னேற்றமடைய |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இலக்கியச் சுவைகளுள் மிகவும் நுட்பமானது <u>நகைச்சுவை</u>
2. நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்குப் பகலும் <u>இருளாய்த்</u> தோன்றும்.
3. கம்பர் இயற்றிய நூல் <u>கம்பராமாயணம்</u>

**1. உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.**

1. அசை ............................. வகைப்படும்

அ) நான்கு ஆ) மூன்று **இ) இரண்டு**



winmeen.com

2. செய்யுள் இயற்றும் இலக்கணத்துக்கு .................................. எனப் பெயர்

அ) அணியிலக்கணம் ஆ) பொருள் இலக்கணம் **இ) யாப்பிலக்கணம்**

3. உவமானத்தின் தன்மையை உவமேயத்தின்மேல் ஏற்றிக்கூறுவது .......................... அணி

அ) உவமை **ஆ) உருவக** இ) இயல்பு நவிற்சி

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. அசைகள் பல சேர்ந்து அமைவது சீர் எனப்படும்.
2. உவம உருபு வெளிப்பட வருவது உவமை அணி.
3. மதிமுகம் - உருவகமாய் மாறும்போது முகமதி என வரும்.

**விடை:**

| வ.எண் | ஒரு பொருள் | பல சொற்கள் |
|---|---|---|
| 1 | மிகுதி | சால, தவ, நனி, கூர், கழி |
| 2. | பேசு | கூறு, விளம்பு, மொழி, இயம்பு, உரை |
| 3 | சூரியன் | ஞாயிறு,கதிரவன், பரிதி, பகலவன், வெய்யோன் |
| 4. | குழந்தை | பிள்ளை, குழவி, மகவு, சேய் |
| 5. | உலகம் | புவி, தரணி, நானிலம், பார், வையம் |

**1. நாட்டுப்புறப் பாடல்களில் வழங்கும் விடுகதைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளைக் கண்டறிந்து எழுதுக.**

1. பூட்டில்லாப் பெட்டி, பெட்டிக்குள் வைரம், வைரத்து ஒளியாலே வையகமே தெரியுது - அஃதென்ன?

விடை: கண்

2. எட்டாத தூரத்திலே எவரும் இல்லாக் காட்டினிலே எழிலான பெண்ணொருத்தி இரவெல்லாம் சிரிக்கின்றாள் - அவள் யார்?

விடை: நிலவு

3. தன்னைத்தான் பலி கொடுப்பான், மற்றவருக்கு ஒளி கொடுப்பான் - அவன் யார்?

விடை: மெழுகுவத்தி

4. உப்பை உண்டவன் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?

விடை: கடல்

5. அக்காள் வீட்டுக்குத் தங்கை போகலாம்; தங்கை வீட்டுக்கு அக்காள் போக முடியாது. அவையென்ன?

விடை: உழக்கு, படி

**1. கீழ்க்காணும் எழுத்துகளை முதல் எழுத்தாக அமைத்துப் பெயர், ஊர்/இடம், பொருள், பறவை, விலங்கு, பூ, தொழில், கருவி ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களைக் கண்டறிந்து அட்டவணையை நிரப்புக.**

| எழுத்து | பெயர் | ஊர்/இடம் | பொருள் | பறவை | விலங்கு | பூ | தொழில் | கருவி |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ஆதவன் | ஆடுதுறை | ஆடை | ஆந்தை | ஆடு | ஆவாரம்பூ | ஆசிரியர் | --- |
| வா | வானம் | வாழப்பாடி | வாழைப் பழம் | வானம் | வாத்து | வாழைப்பூ | வாயிற் காப்போர் | வாள் |
| கா | கார்த்திகேயன் | காங்கேயம் | காற்றாடி | காக்கை | காட்டுப் பன்றி | காட்டுமல்லி | காவலர் | காம்பி |
| செ | செங்கருப்பு | செங்கற் பட்டு | செங்கல் | செம் போத்து | செம்மறி யாடு | செவ்வந்தி | செவிலியர் | -- |
| தி | திங்கள் | திருவள்ளூர் | திருகாணி | -- | திமிங் கலம் | திசம்பர் | திவான் | திருப்புளி |
| பொ | பொம்மை | பொதட்டூர் | பொன் | பொதிப் போதா | பொதி எருது | பொன்அறளி | பொற்கொல்லர் | பொந்தி (மரவாள்) |

**2. பொருத்துக.**

| பழமொழி | பொருள் |
|---|---|
| தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை | அறிவுரை |
| ஆடிப்பட்டம் தேடி விதை | நம்பிக்கை |
| மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே | உறவுமுறை |
| தை பிறந்தால் வழி பிறக்கும் | நகைச்சுவை |
| பசியாமல் இருக்க வரந்தருவேன், கொஞ்சம் பழையது இருந்தால் போடு | உழவு |

**விடை:**

| பழமொழி | பொருள் |
|---|---|
| தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை | உறவுமுறை |
| ஆடிப்பட்டம் தேடி விதை | உழவு |

| | |
|---|---|
| மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே | அறிவுரை |
| தை பிறந்தால் வழி பிறக்கும் | நம்பிக்கை |
| பசியாமல் இருக்க வரந்தருவேன், கொஞ்சம் பழையது இருந்தால் போடு | நகைச்சுவை |

**1. பொருள் மயக்கம் தரும் சொற்கள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பொருளறிந்து கீழ்க்காணும் தொடர்களை நிரப்புக.**

1. உன் வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன? (எத்தனை, எத்துணை)
2. தாயைக் கண்டதும் குழந்தைக்குதான் எத்துணை மகிழ்ச்சி.
3. குரைக்கின்ற நாய் கடிக்காது. (குரை, குலை)
4. தென்னைமரத்தில் தேங்காய்கள் குலை குலையாகத் தொங்குகின்றன. (குரை குரை, குலை குலை)
5. நாள்தோறும் விடியற்காலையில் எழுவது என் வழக்கம் (வழக்கம், பழக்கம்)
6. விளையாட்டு வீரர் சச்சின் இடக்கை பழக்கம் உடையவர். (வழக்கம், பழக்கம்)
7. இன்று மாலை நடைபெறும் கூட்டத்தில் தவிராமல் கலந்து கொள்ளுதல் வேண்டும். (தவறாமல், தவிராமல்)
8. பூம்புகார்ப் பட்டினம் ஒரு காலத்தில் சிறந்த கடற்கரை நகரமாக விளங்கியது. (பட்டினம், பட்டணம்)

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. இலக்கியச் சுவைகளுள் மிகவும் நுட்பமான சுவை நகைச்சுவை
2. நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்குப் பகலும் இருள் ஆகத் தோன்றும்.
3. கம்பராமாயண வானரத்தலைவன் அனுமன்
4. கலிங்கத்துப்பரணியின் ஆசிரியர் சயங்கொண்டார்
5. மருமக்கள்வழி மான்மியம் ஒரு நகைச்சுவைக் களஞ்சியம்.

**2. கீழ்க்காணும் குறட்பாவில் பயின்றுவரும் அணியைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

   பண்புடை யாளர் தொடர்பு.

(உவமையணி, எடுத்துக்காட்டு உவமையணி)

**விடை: உவமையணி**

2. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு.

(உவமையணி, எடுத்துக்காட்டு உவமையணி)

**விடை: உவமையணி**

winmeen.com